பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 13 புதன்கிழமை 27.03.2019 கதிர் 143

### இனி இது ரகசியம் அல்ல!

கிடைக்கும் சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

- இந்த தாரக மந்திரத்தை கனகச்சிதமாகப் பயன்படுத்துபவர் டக்ளஸ் தேவானந்தா எம்.பிதான்.

1990 களின் ஆரம்பத்தில் இந்தியப் படைகள் இலங்கையிலிருந்து புறப்பட்டதும் தமி பக்கம் 02

# மாகாண அதிகாரம் மத்திக்கு செல்ல நானும் உடன்படேன்!

## வடக்கில் 14 தேசியப் பாடசாலைகளை உருவாக்குவது குறித்து ஆளுநர் 'பல்டி'



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 27

மாகாணத்துக்குரிய அதிகாரங்களை மத்தியிடம் கொடுப்பதில் எனக்கும் உடன்பாடு கிடையாது. எனினும், வடக்கிலுள்ள பாடசாலைகள் சிலவற்றின் அதிபர்கள், தேசிய பாடசாலையாக்கும்படி நச்சரித்துக் கொண்டிருந்தார்கள். இதனால, வடக்கிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கருத்து கேட்டேன். அதற்கு அவர்கள் விருப்பமில்லை என்றால் எனக்கும் பிரச்சினையில்லை. மாகாண அதிகாரம் மத்திக்குப் போவதில் உடன்பாடும் இல்லை.

– இவ்வாறு கூறியிருக்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன். பக்கம் 11

## இனியொரு கறுப்பு ஜூலை வந்தால் இலங்கை இரண்டாகப் பிளவடையும்!

### ரெலோ ஸ்ரீகாந்தா எச்சரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 27

கலப்பு நீதிமன்ற பொறிமுறையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டால் மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை உருவாகும் என சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர் டிலான் பெரேரா கூறியுள்ள கருத்து தெருச் சண்டியனின் கருத்துப்போல் உள்ளது. கறுப்பு ஜூலை பக்கம் 11

## தமிழ் மக்களை இனியும் அரசு ஏமாற்ற முடியாது!

### போர்க்குற்றங்களுடன் தொடர்புடையோர் தண்டிக்கப்படவேண்டும் என்கிறார் ஆளுநர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 27

போர்க்குற்றங்களை இழைத்தவர்கள் எனச் சந்தேகத்திற்கப்பால் நிருபிக்கப்பட்டால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என இராணுவத் தளபதி கூறியதுபோன்று குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

-இவ்வாறு கூறினார் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் இராகவன். பக்கம் 02

## கொலைகாரன் ஜனாதிபதியாவதை தமிழ் மக்கள் விரும்பவேயில்லை!

### சிறிதரன் எம்.பி. காட்டமான கருத்து



கொழும்பு, மார்ச் 27

எங்கள் ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்துக்கும் அதிகமான மக்களை கொலை செய்து இந்த மண்ணில் பக்கம் 02

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்

### ஊடகங்களிடம் மஹிந்த கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து ஊடகங்கள் மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஊடகங்களின் பிரதானிகளைச் சந்தித்துக் கலந் பக்கம் 11

## யாழ். மக்களின் தேவைகளுக்காக வடமராட்சியிலிருந்து குடிதண்ணீர்

### நடவடிக்கை ஆரம்பம் என்கிறார் வடக்கு ஆளுநர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கு மாகாணத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆறு பெரும் திட்டங்களை முன்மொழிந்துள்ள மாகாண ஆளுநர் சுரேன் இராகவன், முதல் திட்டமாக வடமராட்சியிலிருந்து குடிதண்ணீரை எடுப்பதற்குரிய பக்கம் 11

## வெற்றி பெறும் ஒருவரையே வேட்பாளராக அறிவிப்பேன்!

### மஹிந்த நேற்றுத் திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 27

ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைச் சரியான நேரத்தில் அறிவிப்போம். வெற்றி பெறக்கூடிய வேட்பாளராகத்தான் அவர் இருப்பார்.

- இப்படித் தெரிவித்திருக்கிறார் பக்கம் 02

## இராணுவத்தினரிடம் கையளித்த போராளிகளுக்கு நடந்தது என்ன?

### சபையில் மாவை எம்.பி. கேள்வி

கொழும்பு, மார்ச் 27

இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட போராளிகளுக்கு என்ன நடந்தது என்று வெளிவிவகார அமைச்சு தெளிவுபடுத்தவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கோரிக்கை விடுத்தார். பக்கம் 02

## ஜெனீவா பரிந்துரை நிராகரிப்பு: சபையில் ஜே.வி.பி. வரவேற்பு!

கொழும்பு, மார்ச் 27

சர்வதேச நீதிபதிகளையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்ற பொறிமுறை அவசியம் என ஜெனீவாத் தொடரில் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை இலங்கை அரசு நிராகரித்துள்ளமையானது வரவேற்கக்கூடிய விடயமாகும். - என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க பக்கம் 11

## வடக்கு – கிழக்கு தொண்டர் ஆசிரியர்களுக்கு புது வருடத்துக்கு முன்னர் நிரந்தர நியமனம்

### இராஜாங்க அமைச்சர் விஜயகலா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவைக்குள் இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். பக்கம் 11

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

காலைக்கதிர் Kalaikathir



## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு தன்னால் செய்யக்கூடிய நடவடிக்கைகளைக் காலம் தாழ்த்தாது முன்னெடுக்கவேண்டும். தமிழ் மக்களை இனியும் ஏமாற்ற முடியாது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனநாயகத்தின் நான்காவது தூண் ஊடகம். அந்த வகையில் கொழும்பில் ஓர் ஊடக சந்திப்பைச் சில தினங்களுக்கு முன்னர் நடத்தியிருக்கின்றேன். அந்தச் சந்திப்பில் நான் கூறியவற்றில் ஊடகம் அர்த்தம் கண்டு கொண்டதன் அடிப்படையில் அவர்கள் போட்டிருக்கின்றனர். இவ்வாறானதொரு நிலையிலையே மற்றுமொரு ஊடக சந்திப்பை இங்கு நடத்துகின்றேன்.

நான் ஜெனீவாவுக்குப் போனது உங்களுக்குத் தெரியும். யாரும் ஜெனீவாவுக்குப் போவதில்லை என்ற சூழ்நிலை இருந்தது. இலங்கை அரசு ஜெனீவாவில் இணை அனுசரணை கொடுத்து கையொப்பமிட்டு கொண்டு வரப்பட்ட ஐ.நா. தீர்மானம் ஒவ்வொரு இரண்டு வருடத்திலும் மீளாய்வு செய்யப்படும். அதுவே கடந்த 2017 ஆம் ஆண்டிலும் இந்த வருடத்திலும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கின்றது.

நான் தற்செயலாக ஆளுநர் ஆனதுபோலவே இந்த விடயத்திலும் நான் தற்செயலாகவே வந்தேன். அந்த உண்மையைச் சொல்ல வேண்டும். ஆகையால் என்னை ஜெனீவாவுக்குச் செல்ல அழைத்த பின்னர்தான் அது குறித்து நான் தேடிக் கொண்டிருந்தேன். இலங்கை அரசு இணை அனுசரணை கொடுத்து ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்த ஆவணத்தை யார் தயாரித்தது என்ற அடிப்படைக் கேள்வி இருக்கிறது. முன்னாள் இலங்கை வெளிவிவகார அமைச்சராக இருந்தவரும் சமந்தா பவரும்தான் தயாரித்தனர். ஆனால் அந்த ஆவணம் யாரால் எழுதப்பட்டது என்று யாருமே கண்டுபிடிக்கவில்லை. யார் எழுதியது என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு கீழ் நான் கேட்டிருக்கின்றேன்.

இது போருக்குப் பின்னரான சமரச முயற்சிக் காலத்தில் சர்வதேசத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம். அப்படியிருக்கும் போது மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு வந்தது. அதன் பின்னர் பெப்ரவரியில் அதன் அறிக்கை வந்தாலும் ஜனாதிபதி செயலகத்துக்கு அது வரவில்லை. அமைச்சரவைக் கூட்டத்தின் தலைவர் என்ற ரீதியில் பிரதமரிடம் அது போயிருந்தது. அவர்கள் அதனை ஏற்றிருந்தனர். அவர்களிடம் இருந்து வந்த அறிக்கை சரியோ பிழையோ என்று சமரசம் செய்ய ஒன்றரை மாத காலம் இருந்தும் அவர்கள் அது சரியென அனுப்பி விட்டனர்.

இரண்டாவதாக இணை அனுசரணை செய்யலாமா இல்லையா என்று கூட அந்தக் காரியாலயம் தீர்மானித்து அனுப்பிவிட்டது. அதன் பிறகு ஜெனீவாவுக்கு யாரும் போகத் தேவையில்லை. நடக்க வேண்டிய விடயங்கள் நடந்துவிட்டன என்று பிரதமர் காரியாலயம் கூறியிருந்தது. அப்போதுதான் நாங்கள் போக வேண்டுமென்றும் எங்கள்நிலைப்பாடு என்னவென்று கட்டாயம் சொல்லவேண்டுமென்றும் ஜனாதிபதி கூறினார்.

ஆகவே பிரதமர் யாரையும் அனுப்பாவிட்டால்தான் ஒரு குழுவை அனுப்பத் தயார் என்றும்கூறி அந்தக் குழுவில் என்னையும் ஜனாதிபதி நியமித்து உள்வாங்கிக் கொண்டார். அதற்குப் பிறகு தான் வெளிநாட்டு அமைச்சர் இருக்கும்போது இன்னொரு குழு போனால் அது நாட்டுக்குச் சரியில்லை என்று கூறி ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி ஒரு குழுவாக நாங்கள் போவதுதான் நாட்டுக்கு நல்லதாக இருக்குமென நான் சொன்னபடியால் அதனை ஏற்றுக் கொண்டு வெளிவிவகார அமைச்சருடன் ஆளுநர் என்ற ரீதியில் நானும் கலாநிதி சரத் அமுனுகம மற்றும் அமைச்சின் செயலாளர் அடங்கிய நான்கு பேரும் ஜெனீவா சென்றோம்.

ஆனால் அறிக்கை வந்து விட்டது. அதனை ஏற்றுக்கொண்டு கையொப்பம் வைக்கப்பட்டு விட்டது. ஆகையால் அதைப்பற்றி எதையும் செய்ய முடியாது. ஆனால் அறிக்கைக்கு மறுமொழி சொல்லாம் என்ற ஒரு காரணம் இருந்தது. அவ்வாறு மறுமொழி சொல்வது இரண்டு விதமாக ஜெனீவாவில் நடக்கும். அதில் ஒன்று 4 நிமிடம் பேசலாம், மற்றது அறிக்கையாக எழுத்தித் தயார் செய்து கொடுக்கலாம்.

அவ்வாறு எழுத்தில் கொடுத்தால் ஆவணப்படுத்தலாம். அதற்கமைய எழுத்தில் மூன்று முக்கிய விடயங்களைச் சொன்னோம். அதாவது இலங்கை அரசு போருக்குப்பின் இடைக்கால நீதி என்பதற்கமைய கடந்த இரண்டு வருட காலத்தில் இதுவரை என்ன செய்துள்ளது என்றும், அதில் தகவலறியும் உரிமைச் சட்டம், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் உருவாக்கம், காணி விடுவிப்பு போன்றவற்றைப் பிரதான மாகக் குறிப்பிட்டிருந்தோம்.

இதில் இரண்டாவதாக நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்ற விடயத்தில் காணாமற்போனோரைத் தேடுவது பற்றி சொல்லியுள்ளோம். ஜெனீவாவிலும் அரசிலும் அரசியல் சமூக கலாசார நிலையில் பிரதான பிரச்சினையாக இருப்பது வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தான். இதைக் குறித்தும் சொல்லியுள்ளோம்.

இந்த மூன்று விடயங்களில் இறுதியாக மூன்றாவது விடயமாக இலங்கை ஒரு தேசம் என்ற ரீதியிலும் அரசு என்ற ரீதியிலும் என்ன செய்ய முடியுமென்பதைச் சொல்லியிருந்தோம். அதாவது வெளிநாட்டு நீதிபதிகள் இங்கு வந்து விசாரிப்பது சாத்தியமாகாது என்று சொல்லியிருந்தோம். அதற்கு எங்களால் விருப்பம் தெரிவிக்க முடியாது என்றும் சொன்னோம்.

இந்தப் பிரச்சினைகளுக்கு உள்ளார்ந்தமாகத்தீர்வுகாணவேண்டும் என்பதே என்னுடைய தனிப்பட்ட கொள்கை. அந்தக் கொள்கையை நான் முன்வைக்கின்றபோது எங்கள் குழுவில் இருந்தவர்களும் ஏற்றுக் கொண்டதால் அந்தக் கொள்கை ஆவணத்தை ஜெனீவாவில் சொன்னோம். இதனால் ஐ.நா தீர்மானத்தில் குறிப்பிட்ட சர்வதேச நீதிபதிகள் என்ற இந்த விடயத்தில் நாங்கள் இணங்கவில்லை என்றும் கூறினோம்.

முதல் ஆவணத்துக்கு 3 தடவையும் நாங்கள் கையொப்பம் இட்டுள்ளோம். ஆகவே இதில் சொல்லியுள்ளவற்றில் செய்ய முடியுமானதைச் செய்யலாம். மற்றதைச் செய்யமுடியதென்றும் சொல்லலாம்.

இனிமேலும் தாமதிக்காமல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். தமிழ் மக்களை இனியும் நாங்கள் ஏமாற்ற இயலாது. அப்பாவிப் பெற்றோரை ஏமாற்ற இயலாது. ஆகவே என்ன செய்யலாம் என்றும் என்ன செய்யமுடியாதென்றும் உண்மையை தெளிவாகச் சொல்ல வேண்டும்.

அதேவேளை, முன்வைக்கப்படும் குற்றச் சாட்சிகள் சந்தேகம் இல்லாமல் நீருபணமாயின் குற்றம் செய்த எல்லா இராணுவத்தினரையும் தரம் பார்க்காமல் நீதிக்கு முன்னால் கொண்டு வர வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தினோம். அதுதான் நியாயம். எந்தவொரு இராணுவத்திலும் சில பிழையானவர்கள் சீருடை அணிந்திருக்கக் கூடும். அப்படித்தான் உலக வரலாறுகளைப் பார்க்கின்றபோதும் தெரிகிறது.

நான் அரசியல்வாதி இல்லாதபடியால் ஜெனீவாவில் எல்லா அரசியல்வாதிகளோடும் எல்லா புலம்பெயர் அமைப்புக்களோடும் இருந்து கதைக்கக் கூடிய சந்தரப்பம் கிடைத்தது. அதுவும் சிங்கள, தமிழ் புலம் பெயர்ந்தோர் எனச் சண்டை பிடிக்கும் அனைவருடனும் நான் சந்தித்துக் கதைக்கக் கூடியதாக இருந்தது. குறிப்பாக சரத் ச்வீரசேகர சிங்கள மக்களுக்கான நாயகனாக அங்கு இருக்கின்றார். அவர் கூட குற்றம் செய்தவராகச் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாக இராணுவத்தினர் நிரூபிக்கப்படின் தண்டிக்கப்படவேண்டுமென்று சொல்லியுள்ளார்.

அதுவும் இரண்டு முறையிலும் தண்டிக்கப்படவேண்டுமென்றார். அதாவது சிவில் சட்டம் மற்றும் இராணுவச் சட்டங்களில் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்று கூறியிருந்தார். அது எங்களின் நிலைப்பாடு. அதை நாங்கள் மாற்றவும் இல்லை. மறுக்கவும் கூடாது. ஜெனீவாவில் நான் நின்றபோது தமிழ்த் தேசம், தமிழ் மக்களுக்காகச் செயற்படுகின்றோம் என்று சொல்லிக் கொண்டு அநேக குழுக்கள் அங்கே இருந்தன. ஆனால் அவை அனைத்தும் ஒன்றுடனொன்று முரண்பட்டு காணப்பட்டன. ஒருவரையொருவர் முகங் கொடுத்துக் கூடப் பார்க்கவில்லை. ஆனால் நான்தான் அவர்களுக்கு இடையில் சென்று அணிலாகவும் பறவையாகவும் அங்கங்கு போய் ஏன் கதைக்காமல் இருக்கின்றீர்கள் என்றும், நீங்கள் ஒரே நாட்டில் இருந்துதானே வந்திருக்கின்றீர்கள் என்றும் மக்களுக்குத் தீர்வு வேண்டுமென்றால் ஒன்றாகக் கதைக்கவேண்டும் என்றும் கேட்டேன்.

ஜெனீவா செல்ல முன்னர் எழுத்துமூலமாக 16 ஆவணங்கள் மக்களிடமிருந்து எனக்குக் கிடைத்தன. அவற்றின் சாராம்சங்களை நான் எடுத்துச் சென்றேன். ஆனால் பிராதான அவையில் அதனைக் கொடுக்க இயலாது. ஏனெனில் அங்கு கொடுக்க முடியாது. அங்கு நடப்பவற்றுக்கு பதில் மட்டுமே வழங்க முடியும். ஆனாலும் அவர்களை தனிப்பட்ட ரீதியாக நான் சந்தித்தவேளை அதனைக் கொடுத்திருந்தேன்.

அதில் பிரதானமாக காணாமற்போனோர் தொடர்பான தேடுதலை தீவிரமாகச் செய்ய வேண்டுமென்று தான் இருந்தது. மேலும் சிலர் நஸ்டஈடு கேட்டிருந்தனர். சிலர் அரசு மன்னிப்பு கேட்க வேண்டுமென்றும் கேட்டிருந்தனர். சிலர் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கவேண்டுமென்று கூறியிருந்தனர் – என்றார். (ஐ-07)

## இராணுவத்தினரிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு- செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே மாவை இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

இறுதி யுத்தத்தின்போது போராளிகள் அவர்களின் உறவினர்களினால் இராணுவத்தினிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதற்கான ஆதாரங்கள் உள்ளன. அதே போன்று இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட போராளிகளின் முழு விவரங்களும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் காணப்பட்டன.

அவரின் ஆட்சிக்காலத்தில் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து நாம் பலமுறை அவர்களைச் சந்தித்துப் பேசினோம். இதன்போது அவர் முன்னாள் போராளிகள் மற்றும் அரசியல் கைதிகளின் விவரங்கள் குறித்து ஏழு இற்கும் மேற்பட்ட கோப்புகளை எங்களிடம் காட்டினார்.

அந்த பட்டியல் தற்போதும் அரசிடம் காணப்படுகின்றது என நாம் நம்புகின்றோம். எனவே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் இராணுவத்தினர்களிடம் கையளிக்கப்பட்ட போராளிகளுக்கு என்ன நடந்தது என்பது குறித்து அரசு தெளிவுபடுத்த வேண்டும் – என்றார். (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழர் அரசியல் தரப்பில் கிடைத்த ஒரு சொட்டு வெளியூடாகத் தலை நீட்டிக் கொண்ட டக்ளஸ் தேவானந்தா 1994 முதல் இன்று 2019 வரை சுமார் கால் நூற்றாண்டு காலம் தொடர்ச்சியாக யாழ். மாவட்டத்தின் எம்.பியாக இருக்கின்றார். சுமார் இருபது வருடங்கள் அமைச்சரும் கூட.

அரசியலில் ஏற்றமோ, இறக்கமோ அது பற்றிக் கவலைப்படாமல் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் களைக்காமல் – சளைக்காமல் – காரியமாற்றுவதில் சூரர் தான். அதனால் சந்தர்ப்பவாதி என்றும் சில சமயம் கூறுவர்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஒரு சம்பவம். சிங்கள எம்.பியான நண்பர் ஒருவர் மூலம் அறிந்த தகவல் இது.

மதிய நேரம் நாடாளுமன்ற கன்ரீனில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, மஹிந்தானந்த அளுக்கமகே, தினேஷ் குணவர்த்தனா போன்றோர் அமர்ந்திருந்து மதிய உணவு அருந்தியபடி பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்தக் குழுவுடன் மதிய போசனம் அருந்த வந்து அமர்ந்தார் டக்ளஸ் தேவானந்தா.

அவரைச் சுட்டிக்காட்டிய மஹிந்தானந்த அளுத்கமகே "இவர்தான் இப்போது பட்ஜெட் விவாதத்தில் எதிர்க்கட்சிகளின் ஆஸ்தானவித்துவான். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு அமைச்சிற்கான ஒதுக்கீட்டின் மீதும் இவர் காத்திரமாக உரையாற்றுகின்றார்." – என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கூறினார்.

"அப்படியா? வடக்கு – கிழக்குப் பற்றியா பேசுகின்றார்? அல்லது முழு இலங்கை விவகாரம் குறித்தும் பேசுகின்றாரா?" – என்று கேட்டார் மஹிந்தர்.

"பெரும்பாலும் வடக்கு – கிழக்குப் பற்றித்தான் பேசுகிறேன். அதேசமயம் பொதுவாக முழு நாட்டுக்கும் உரிய விடயங்களையும் சுட்டிக்காட்டுகின்றேன்." – என்று விளக்க முற்பட்டார் டக்ளஸ்.

"இல்லை. அவர் பத்து நிமிடங்கள் பேசினால் அரைவாசி நேரம் – சுமார் ஐந்து நிமிடம் – கூட்டமைப்புக்குத்தான் செமத்தி அடி" – என்றார் மஹிந்தானந்த அளுத்கமகே.

அவருக்கு ஒரு விளக்கம் அளித்தார் மூத்த நாடாளுமன்ற உறுப்பினரும் பழுத்த அனுபவசாலியுமான மஹிந்த ராஜபக்ஷ.

"வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் ஒவ்வொரு நாளும் – ஒவ்வொரு அமைச்சு மீதான விவாதத்திலும் – பேசுவது என்றால் இலேசான காரியமல்ல. புள்ளி விவரங்கள், தரவுகளுடன் பேசவேண்டும். ஒவ்வொரு அமைச்சும், ஒவ்வொரு துறையும் வித்தியாசமானவை. அவற்றின் தரவுகளைப் பெற்று, தொகுத்து, புள்ளி விவரங்களுடன் பேசுவதற்கு உங்களுக்குப் பின்னால் ஒரு பெரிய அணி செயற்பட வேண்டும். டக்ளஸின் அரசியல் குழுவில் பல மூத்த – விடயம் தெரிந்த – சாமர்த்தியசாலிகள், துறைதோய்ந்தவர்கள், நிபுணர்கள் இருக்கின்றார்கள் என நான் அறிகிறேன். அந்தப் பின்புலத்தை வைத்துக்கொண்டு, தனக்கு இருக்கும் நாடாளுமன்ற அறிவைப் பயன்படுத்தி, சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி விடயத்தைக் கொண்டு போகிறார் டக்ளஸ். அவரைப் போல கடுமையாக உழைக்கப் பழகிக் கொள்ளுங்கள்!" – என்று தன்னோடு இருந்தவர்களுக்கு ஓர் அட்வைஸும், டக்ளஸுக்கு ஒரு 'சேர்ட்டிபிக்கெட்டும்' கொடுத்தார் மஹிந்தர்.

கிடைத்த சந்தர்ப்பத்தைக் கனகச்சிதமாகப் பயன்படுத்துவதில் டக்ளஸ் சூரர்தான்!

– இப்படி பத்துப் பலதுமாக நடக்கும் சம்பவங்களைத் திரட்டி நான் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் வழமையில் இன்றைய பத்தியை முடித்தால் நாளை – ஏன் இன்றே – என்ன நடக்கும் என்பதையும் முற்கூட்டியே உரைத்துக் காட்டிவிட விரும்புகிறேன்.

தங்களை அடையாளப்படுத்தாமல், அநாமோதயமாகச் செயற்பட்டுக் கொண்டு, அதையே தங்களுக்கு வசதியாகவும் வாய்ப்பாகவும் உபயோகித்துக் கொண்டு, மற்றவர்கள் மீது அபாண்டப் பதிவுகளை முன்னெடுக்கும் சில இணையத்தளங்கள், என் பெயரைக் குறிப்பிட்டு, ஓர் அரசியல் கட்சி கூட இடம்கொடுக்காததால் இவர் இப்போது கடைசியாக டக்ளஸாவது இடம் கொடுப்பார் என்ற நப்பாசையிலே அவரைப் புகழ்ந்து பாடத் தொடங்கிவிட்டார் என்று 'பதிவு' செய்வார்கள். – முதுகில் எலும்பில்லாத ஊடகக் கற்றுக்குட்டிகள்.

வெறும் வாயை மெல்லும் நம்மவர்கள் சிலருக்கு அந்தப் பதிவு நல்ல அவலாகி விடும். மெல்லுங்கள். மெல்ல மெல்லுங்கள். அப்போதுதான் விலாசமில்லாத அந்த இணையத்தளங்களும் ஏதோ தங்கள் காலத்தையும் ஓட்டமுடியும்...!

– மின்னல் –

## கொலைகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய இனப்படுகொலையை நடத்திய கோட்டாபய ஜனாதிபதியாக வர வேண்டும் என்று நிற்கிறார். ஜனாதிபதியாகவரவேண்டும் என்ற கனவை கோட்டாபய முதலில் விடவேண்டும். அந்தக் கொலைகாரன் ஜனாதிபதியாக வருவதைத் தமிழ் மக்கள் விரும்பவில்லை.

– இவ்வாறு காரசாரமாகக் கருத்து வெளியிட்டுள்ளார் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

அவர்மேலும்தெரிவிக்கையில்–

வரவு – செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்பின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கும் .

நாங்கள் இந்த அரசுக்கு ஆதரவு வழங்கி பக்கம் 11 >>>

## வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

நேற்றுக் காலை ஊடக நிறுவனங்களின் பிரதானிகளைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொதுத் தேர்தல் ஒன்று வருகிறது என ஒரு தரப்பு சொல்கிறது, மாகாண சபைத் தேர்தல் ஒன்று வருகிறது என இன்னொரு தரப்பு சொல்கிறது. ஏன் ஜனாதிபதி தேர்தல் கூட வருவதாகச் சொல்கின்றனர். ஆனால் தேர்தல் தொடர்பில் அப்படியான தகவல் எதுவும் எனக்குத் தெரிந்தவரை இல்லை.

கோட்டாபய ராஜபக்ஷ வருவார் எனத் தீர்மானிக்கவில்லை. பஸில் வருவார் என்றனர். கோட்டாபய வருவார் என்றனர். சமல் ராஜபக்ஷ வருவார் என்றனர். குடும்பத்தில் ஒவ்வொருவர் தொடர்பிலும் மிகப் பெரிய கருத்துக்கள் பரப்பப்பட்டன. தான் போட்டியிடமாட்டேன் என பஸில் கூறிவிட்டார்.

நான் இன்னும் வெற்றி பெறக்கூடிய ஒருவரைத் தேடிக் கொண்டிருக்கின்றேன். தமது வேட்பாளர் யாரென்பதை ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரைப் பொறுத்து தான், எங்கள் வேட்பாளரைத் தீர்மானிப்போம் – என்றார்.

கூட்டணி அமைப்பது தொடர்பாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் நடத்தப்படும் பேச்சுக்களின் நிலைமை என்ன என்று ஒரு ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட போது பதில் வழங்கிய மஹிந்த – ஆரம்பத்தில் சில தாமதங்கள் இருந்தாலும் இப்போது இருதரப்பு பேச்சு நல்ல முன்னேற்றத்துடன் நடக்கின்றன எனக் குறிப்பிட்டார்.

# வவுனியா புதுக்குளம் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கல்

வவுனியா, மார்ச் 27

வவுனியா புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலய மாணவர்களுக்கு பாடசாலை அதிபர் திருமதி எஸ்.கமலாம்பிகை தலைமையில் நேற்று சீருடைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில பிரதம அதிதிகளாக வடமாகாண சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் றொசான் பெனாண்டோ, வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி.கணேசநாதன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்குச் சீருடைகளை வழங்கினர்.



பொன்னையா நவமணி அம்மையாரின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பாடசாலையின் 160 ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குப் பாடசாலைச் சீருடைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி மஹிந்த வில்வஆராச்சி, ஓமந்தை கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.சசிகுமார் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(ஐ - 100)

# தலைமன்னாரில் சிக்கிய 78 கிலோ பீடி இலைகள்

## சந்தேகநபர்கள் தப்பி ஓட்டம்

தலைமன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் ஆதாம் பாலம் 5ஆம் திட்டியில் நேற்று முன் தினம் 78கிலோ நிறையுடைய பீடி இலை பொதியைக் கைப்பற்றியுள்ளதாகவும், சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுவிட்டனர் எனவும் தலை மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் தலைமன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் அடிப்படையில் ஆதாம் பாலத்தின் 5ஆம் திட்டியில் கைவிடப்பட்ட நிலையில் பீடி இலைப் பொதிகள் காணப்பட்டுள்ளன.

இதன் நிறை 78கிலோ கிராம். சட்ட விரோதமான முறையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இவை படகில் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் கூறினர்.

(ஐ - 100)

# ஜெனீவா தீர்மானத்தை அரசு செயற்படுத்தாது

## கூறுகிறார் சாள்ஸ் எம்.பி



வவுனியா, மார்ச் 27

ஐ.நா. தீர்மானங்களை அரசு நடைமுறைப்படுத்தும் என நான் நம்பவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

ஜெனீவா தீர்மானம் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –


2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் சர்வதேச நீதிபதிகள் அடங்கலாக இலங்கையில் நடைபெற்ற யுத்தக் குற்றத்தை விசாரிப்பதற்கு இலங்கை அரசு இணங்கிக் கைச்சாத்திட்டது. 2017 ஆம் ஆண்டு அதே 34/1 தீர்மானம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுமென்று இலங்கை அரசு இணங்கி கைச்சாத்திட்டது. ஆனால், அவை நிறைவேற்றப்படவில்லை.

அதேபோன்று, 2019ஆம் ஆண்டு 40/1 தீர்மானம் அண்மையில் இலங்கை அரசின் சம்மதத்துடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்தத் தீர்மானத்தையும் சர்வதேச மேற்பார்வையின் கீழ் இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். ஆனால் இலங்கை அரசு இதை நடைமுறைப் படுத்துமென்று நான் நம்பவில்லை.

இந்தத் தீர்மானத்தை அரசு நடைமுறைப்படுத்தவில்லை எனில், சகல தமிழ்க் கட்சிகளும், சகல புலம்பெயர் அமைப்புக்களும் ஒன்றாக இணைந்து 24 நாடுகளுடைய ஆதரவைப் பெற்று இலங்கை அரசு நடைமுறைப்படுத்தாத விடயங்களைச் சர்வதேச சமூகத்தால் நடைமுறைப்படுத்தும் தீர்மானம் ஒன்றை ஐ.நா.மனித உரிமை கவுன்ஸிலில் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும் – என்றார்.

(ஐ - 100)

# 4 இலட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகள் நேற்று பறிமுதல்



கிளிநொச்சி, மார்ச் 27

நான்கு இலட்சம் பெறுமதியான மரக்குற்றிகளை பூநகரிப் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

பூநகரி, அரசர்கேணி பகுதியிலிருந்து கிளிநொச்சிக்கு கப் ரக வாகனத்தில் எடுத்து செல்லப்பட்ட முதிரை மரக் குற்றிகளே இவ்வாறு பொலிஸாரால் நேற்று அதிகாலை கைப்பற்றப்பட்டன.

பூநகரிப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் ஆலங்கேணிப் பகுதியில் திடீர்ச் சோதனை நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டனர்.

இதன்போது, அந்த வீதியூடாகச் சென்ற கப் ரக வாகனத்தை சோதனையிட்டபோது, பெறுமதி வாய்ந்த மர குற்றிகள் மீட்கப்பட்டன.

மரக்குற்றிகளை ஏற்றிவந்த வாகன சாரதி மற்றும் உதவியாளர் தப்பிச் சென்றுள்ளனர் என்றும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் பூநகரிப் பொலிஸார் கூறினர்.

(ஐ)

# இராணுவச் சீருடைகளை ஒத்த உடைகளுக்கு தடை

கொழும்பு, மார்ச் 27

இராணுவத்தின் சீருடையை ஒத்த ஆடைகளைப் பயன்படுத்துவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

இராணுவச்சீருடையை ஒத்த ஆடைகள் அணிந்தால் ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்க வாய்ப்புள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாதாள உலகக்குழுக்கள் உள்ளிட்ட பல குற்றவாளிகள், இராணுவச் சீருடையை ஒத்த உடைகளில் குற்றங்களில் ஈடுபட்டுள்ளமையை குறிப்பிட்ட அவர், சினிமாவில் இராணுவச் சீருடை பயன்படுத்தப்படுவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும் என்றார்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்துடன் தொடர்புடைய இந்த விடயத்தில் கவனம் செலுத்தப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ஐ)

# 7 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்; 40 வயதுடைய நபர் கைதானார்

மன்னார், மார்ச் 27

மன்னார் நானாட்டான் பகுதியில் ஏழு வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 40 வயது நபரை நானாட்டான் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

மன்னார் நானாட்டான் பகுதியில் ஏழு வயதுச் சிறுமி யாரும் இல்லாத நேரத்தில் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். இது குறித்து சிறுமி தனது பெற்றோருக்குத் தெரிவித்தமையை அடுத்து 40 வயதுடைய நபரை நானாட்டான் பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணை மன்னார் நானாட்டான் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ஐ - 100)

# 750 ரவைகள் மீட்பு

வவுனியா போகஸ்வெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ரி - 56 துப்பாக்கிக்கான 750 ரவைகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

போகஸ்வெவ பகுதியில் உள்ள மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு அண்மையில் அலுவலகப் பணியாளர்கள் சிரமதான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இந்தத் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

போகஸ்வெவ பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அந்த ரவைகள் மீட்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணையை போகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ஐ - 100)

# நாணயக்குற்றிகளை வழங்கக் கருமபீடம்

## மத்திய வங்கியில் இன்று திறப்பு

கொழும்பு, மார்ச் 27

பொதுமக்களுக்கு நாணயக் குற்றிகளை வழங்குவதற்கான கருமபீடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

கொழும்பிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் தலைமைக் காரியாலயத்தின் தரைத் தளத்தில் இன்று இந்தக் கருமபீடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த கருமபீடமானது, அரச மற்றும் வங்கி விடுமுறை தினங்கள் தவிர்ந்த புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் முற்பகல் 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

(ஐ)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

### கோடரிக்காம்புப் போக்கு

ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் அரசுப் பிரதிநிதியாகச் சென்று வந்த வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நாடு திரும்பியதும் நேற்றுமுன்தினம் கொழும்பிலும் நேற்று யாழ்ப் பாணத்திலும் பத்திரிகையாளர் மாநாடு நடத்தி பல வித கருத் துக்களை முன்வைத்திருக்கின்றார்.

'சரஸ்வதி சபதம்' படத்தில் ஒரு காட்சி. அரசர் இறந்து விட்ட மையால் ஆட்சிக்கு ஆள் இல்லாத நாட்டுக்கு அரசனைத் தெரிவு செய்கிறார்கள். பட்டத்து யானையிடம் ஒரு மாலை யைக் கொடுத்து அனுப்புகிறார்கள். அது யார் கழுத்தில் மாலை யைப் போடுகின்றதோ அவர்தான் அரசர். மாலை ஒரு பிச்சைக் காரி கழுத்தில் விழுகிறது. ஒரே நாளில் பிச்சைக்காரி மகா ராணியாகி விடுகிறார். அந்த மமதையில் - செருக்கில் - அட்டகாச மாக அவர் நடக்கின்றார். அது பற்றி ஒரு பாடல் வருகின்றது.

*"ராணி மகாராணி, இராச்சியத்தின் ராணி; நேற்று வரை வீதியிலே நின்றிருந்த ராணி; நிலைமை தன்னை மறந்து விட்ட தலைகனத்த ராணி; யானை மாலை போட்டதாலே ஆள வந்த ராணி!"* - என்று கவியரசர் பாடுவார்.

அது போல யாரோ போட்ட நியமனத்தில் பதவிக்கு வந்தவர் கள் எல்லாம் மக்களின் பிரதிநிதிகள் போலப் பேசுகின்றனர். மக்களின் பிரதிநிதிகளைப் பார்த்துக் கிண்டல்தனத்தில் கருத்து வெளியிடுகின்றனர்.

* ஜெனீவாவுக்கு சென்ற தமிழர் பிரதிநிதிகள் ஐக்கியப்பட்டு செயற்படவில்லை. தங்களுக்குள் பிரிவினைப்பட்டு கன்னை கட்டி நின்றார்கள்.

* இனிமேலும் கால தாமதம் செய்யாமல் யுத்த காலப் பிரச் சினைகள் விசாரித்து முடிக்கப்பட வேண்டும்.

* இலங்கை நீதித்துறை மீது நம்பிக்கை வைத்து உள் நாட்டு நீதிப் பொறிமுறைகளில் பிரச்சினைகளை முடித்துக் கொள்ள வேண்டும்.

- இப்படி எல்லாம் உபதேசம் நடத்தியிருக்கின்றார் அவர்.

இந்த உபதேசங்களைக் கேட்கும்போது எமக்கு ஒரு நியாய மான சந்தேகம் பிறக்கின்றது. இந்த ஆளுநர் இதுவரை கால மும் இந்த நாட்டில்தான் இருந்தாரா? அல்லது வேற்றுக் கிர கத்தில் இருந்து விட்டு இப்போதுதான் வந்திருக்கின்றாரா? - என்பதுதான் அது.

முதலாவது - ஜெனீவாவில் தமிழர் தரப்பு பிளவுபட்டிருக்கலாம். ஆனால் ஒரு விடயத்தில் அவர்கள் ஐக்கியப்பட்டிருக் கின்றார்கள். அது - இந்த ஆளுநரும் சேர்ந்து பிரதிநிதித்து வப்படுத்தும் இலங்கை அரசுத் தரப்பின் படைகள் இழைத்த யுத்தக் குற்றத்துக்குக் காரணமானவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி, உண்மையை அம்பலப்படுத்தி, குற்றவாளிகளைத் தண்டிக்கும் விதத்தில் பொறுப்புக் கூறலை நிலை நாட்டச் செய்ய வேண்டும் என்பது தான். அதில் தமிழர் தரப் புக்குள் கருத்து வேறுபாடு இல்லை. அதை எப்படி செய்வது என்பதில்தான் கருத்து வேறுபாடு. தமி ழர் தரப்பில் கருத்து வேறுபாடு இருப்பதால்தான் ஆளுநர் பிரதி நிதித்துவப்படுத் தும் இலங்கை அரசுத் தரப்பினால் பிரச்சினை யைத் தீர்க்க முடியாது இருக்கின்றது என்ற கருத்தில் கூறுவது அபத்தமா னது. அவரது அரசுத் தரப்பே 2015 செப்டெம்பரில் இருந்து காலத்துக் காலம் நழுவி, முன்சொன்ன கூற்றுக்கு மாறாக நிலைப் பாடு எடுத்தமைதான் இப்போது பிரச்சினைக்குக் காரணம்.

பத்து வருடங்களாகியும் தமிழருக்கு நீதி கிட்டாமல் இருப்ப தற்கு அவரும் சேர்ந்து காபந்து பண்ணும் அவரது தென்னிலங் கைச் சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் மேலாண்மைப் போக்குத்தான் காரணம்.

ஆகவே நீதி கிட்டாமல் தாமதிப்பதற்கான விசனத்தை தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் கொழும்பு அரசைப் பார்த்துத் தான் அவர் கூற வேண்டும். தமிழர் தரப்பைப் பார்த்து அல்ல.

இதில் உச்ச வேடிக்கை என்னவென்றால் இலங்கையின் நீதித்துறைக்கு அவர் வக்காலத்து வாங்குவதுதான். நாடாளு மன்றக் கலைப்பு விடயத்தில் இலங்கை நீதித்துறை நியாய மாக நடந்து கொண்டு விட்டதால் தமிழர் தரப்பு விடயத்தில் நீதி யாக நடந்து கொள்ளும் என்று தமிழ் மக்களுக்கு கதை விடும் அவருக்கு இலங்கை நீதித்துறையின் பேரினவாதப் போக்குடைய கடந்த கால சரித்திரம் முற்றாக மறந்து போய் விட்டது போலும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை நீதித்துறை யின் நீதியாளர்கள் தமது கைகளில் எடுத்துக் கொண்டு எவ் வாறு மனச்சாட்சி இல்லாமல் நீதி செய்தார்கள் என்பதும் -

ரவிராஜ் கொலை வழக்குப் போன்றவற்றில் கூட ஒட்டு மொத்த நீதித்துறை எப்படி சிங்கள மேலாண்மை மனதுடன் செயற்பட்டது என்பதும் -

தமிழரான சுரேன் ராகவனுக்குப் புரியாமல் போனமை வியப்பிலும் வியப்பு.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா உண்மையான பௌத்தனாக இருந்திருந்தால் நான் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைமை வந்திருக்காது." - என்றார் புலிகளின் தலைவர் பிரபாகரன்.

"இலங்கையின் நீதித்துறை நீதியாக நடக்குமாக இருந்தி ருந்தால் பல்லாயிரக்கணக்கில் தமிழர்களைப் கொன்று குவித்து முள்ளிவாய்க்கால் பேரவலம் வரைத் தமிழரைச் சீர ழிக்கும் துணிவு இலங்கை அரசுத் தலைமைக்கும், படைகளுக்கு வந்திருக்கவே வந்திருக்காது, நீதித்துறையின் அநீதிப் போக்கும் இந்த அராஜகத்துக்கு வழி செய்தது என் பதை நாம் மறந்துவிட முடியாது.

"ஒரு படை வீரனைக் கூட விசாரணைக்கு உட்படுத்த அனுமதிக்கவே மாட்டேன்" - என்று திரும்பத் திரும்ப கர்ஜிக்கும் பட்டத்து யானை போட்ட மாலை, தன் கழுத்தில் விழுந்து விட்ட தால் அதிகாரத்துக்கு வந்தவர், தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு விரைவில் உள்நாட்டுப் பொறிமுறையிலேயே நீதி கிட்டும் என்று கதை அளப்பது கோடரிக்காம்புத்தனம் இன்றி வேறில்லை.

# காங்கேசன்துறை ஊடாக ஏற்றுமதி நடவடிக்கைகள்!

## அமைச்சர் சாகல தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 27

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட காங்கேசன்துறைத் துறை முகத்தை மூன்று ஆண்டுகளில் அபிவிருத்தி செய்து, அதன் ஊடாக ஏற்றுமதிப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக கப்பற் றுறை மற்றும் தெற்கு அபிவி ருத்தி அமைச்சர் சாகலரத்நாயக்க நேற்று முன்தினம் நாடாளும ன்றத்தில் தெரி வித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போக்கு வரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, துறை முகங்கள், கப்பல்துறை அலுவல் கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.


அமைச்சர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

எந்தவொரு முனையமும் விற்கப்படவில்லை. கொழும்பு துறைமுகம் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. கடந்த வருடம் 700 கோடி கொள்கலன்களை ஏற்றி இறக்கியுள்ளது. சர்வதேச தரத்தில் இதனை நாம் தர முயர்த்தியுள்ளோம். ஜப்பான் அரசு எமது துறைமுகங்களின் அபிவிருத்திக்காக 40 வருடத் துக்கு சலுகை அடிப்படையில் கடன் வழங்கியுள்ளது. இதற்காக 10 வருடங்களுக்கு வட்டி அறவி டப்பட மாட்டாது. அதன் பின்னர் 1.4 சதவீத வட்டி அறவிடப்பட வுள்ளது. இந்தக் கடனைக் கொண்டு நாம் துறைமுகங் களை அபிவிருத்தி செய்வோம்.

குறிப்பாக 30 வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட காங் கேசன்துறைத் துறைமுகத்தின் அபிவிருத்தியில் நாம் கூடுதல் அக்கறை செலுத்தவுள்ளோம். அதேபோன்று திருகோண மலை துறைமுகத்தையும் நாம் மேம்படுத்தவுள்ளோம். அம்பாந் தோட்டை துறைமுகத்தை நாம் குறைகூறவில்லை. எனினும், இதற்கு எடுக்கப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தும் முறை மற் றும் இதன் மூலம் பெறக்கூடிய வருமானங்களுக்கான வழி முறைகளை கடந்த அரசாங்கம் கண்டறிந்திருக்கவில்லை. எனவே நாம் அதற்கு தீர்வு கண் டுள்ளோம் - என்றார். (ஐ)

# கூட்டமைப்பைத் தமிழர் நிராகரித்து விட்டார்கள்!

## சகல தமிழ்க் கட்சிகளுடனும் கலந்துரையாடுகின்றமை அவசியம் என டக்ளஸ் எம்.பி வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், மார்ச் 27

ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் கவுன்ஸிலின் தீர்மா னமாக இருந்தாலும், புதிய அர சமைப்பு அமுலாக்கமாக இருந் தாலும் அவ்விடயங்கள் தொடர் பாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் உரிமை சார் நியாயங்கள் என்பவற்றோடு தொடர்புபட்ட அனைத்து தமிழ்க் கட்சிகளுடனும் கலந்துரையா டியே பொதுத் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட வேண்டும் என்று செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு:

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் அரசியல் தீர்மானங்களை யும், செயற்பாடுகளையும் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் எதிர்த் தும், விமர்சித்தும் வருகின்ற நிலையில், நாடாளுமன்ற அங் கத்துவத்தை மட்டும் கணக்கிட்டு, அதில் தமது அரசியல் நலன் களை முன்னிறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு மட் டும் கலந்துரையாடி தமிழ் மக்க ளுக்கு ஏற்புடையதற்ற தீர்வைத் திணிக்க முடியுமென தென் இலங்கை அரசுகள் முயற்சிப் பார்களேயானால் அது ஒரு போதும் வெற்றியளிக்காது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளையும், உரிமைக் கான நியாயத்தையும் தமது சுய லாப அரசியல் நலன்களுக்காக காட்டிக்கொடுத்துள்ளதுடன், அரசின் அடிவருடியாக மாறி யுள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை இனியும் நம்புவதற்கு தமிழ் மக்கள் தயாராக இல்லை என்பதை தென் இலங்கை ஆட்சி யாளர்களும், அரசியல்வாதி களும் புரிந்துகொள்ளவேண் டும்.

தமிழ் மக்களிடையே இருக் கும் பல்கட்சி ஜனநாயக செயற் பாட்டை அரசும், சர்வதேச சமூக மும் மதித்துச் செயற்படாமல், மனித உரிமைகள் தொடர்பாக வும், நிலைமாறுகால நீதி தொடர் பாகவும் குரல்கொடுப்பதும், தீர் மானங்கள் நிறைவேற்றுவதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயன் தராது.

அனைத்துத் தமிழ் கட்சிக ளுடனும் கலந்துரையாடி பொதுத் தீர்மானமொன்று ஏற்படுத்தப் படாமல், தமிழ் மக்கள் மீது வலு வான உள்ளடக்கமற்ற பொதி களை திணிக்க முற்பட்டால், அத்தகைய செயற்பாட்டை ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகமும் எதிர்த்து நிராகரிக்கும் அவசியம் ஏற்படும் என்பதையும் பதிவு செய்ய விரும்புகின்றேன் - என் றுள்ளது. (ஐ)

# நாலக டி சில்வாவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 27

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள் ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட் டாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட் டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள அவர் நேற்று வரை விளக்கம றியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் நேற்று மீண்டும் கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னி லைப்படுத்தப்பட்டார்.

இதன்போதே அவரை எதிர் வரும் ஏப்ரல் மாதம் 09 திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

நாலகடிசில்வாவிற்கு எதிரான நேற்றைய வழக்கு விசாரணை களின்போது, அவரால் திட்ட மிடப்பட்டதாக தெரிவிக்கப்படும் கொலைச்சதிக்கான ஆதாரங்கள் போதியளவு காணப்படுவதாக சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

**நாளை**

28.03.2019
வியாழக்கிழமை
நட்சத்திரம்: மூலம் பி.ப. 02.17 வரை.
திதி : அட்டமி பி.இ. 02.44 வரை.
இராகுகாலம் : 01.44 - 03.14
சுப நேரம் : 07.44 - 09.14

# பாக். தேசிய நாள் நிகழ்வில் மஹிந்த சிறப்பு விருந்தினர்

கொழும்பு, மார்ச் 27

பாகிஸ்தான் தேசிய நாளை முன்னிட்டு கொழும்பில் நடத்தப்பட்ட நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது அணியைச் சேர்ந்த தலைவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் 79 ஆவது தேசிய நாளை முன்னிட்டு கொழும்பு கலதாரி விடுதியில் நேற்றுமுன்தினம் மாலை சிறப்பு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாகிஸ்தான் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்வுக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். சிறப்பு விருந்தினராக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டிருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷவுடன், அவரது ஆதரவுத் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, தினேஸ் குணவர்த்தன, ஜி.எல்.பீரிஸ், போன்றவர்களும், நிமால் சிறிபால டி சில்வா, அத்துரலிய ரத்ன தேரரும் நிகழ்வில் காணப்பட்டனர்.

எனினும், அரச தரப்பைச் சேர்ந்த அமைச்சர் அர்ஜுன ரணதுங்க உள்ளிட்ட ஒரு சிலரே இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் ஒரு கட்டமாக பாகிஸ்தான் கொடி அலங்காரத்துடன் தயாரிக்கப்பட்ட கேக் வெட்டப்பட்டது.



அதனை ரவூப் ஹக்கீம், பாகிஸ்தான் தூதுவர் ஆகியோருடன் இணைந்து மஹிந்த ராஜபக்ஷ வெட்டியிருந்தார்.

மஹிந்த ஆட்சியில் இருந்தபோது, பாகிஸ்தானுடன் நெருக்கமான நட்புறவைக் கொண்டிருந்தார்.

அண்மைக்காலமாக பாகிஸ்தானுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான நட்பு இன்னும் வலுப்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் நிர்வாகத்துக்கு எதிராக பிக்கு வழக்கு

முல்லைத்தீவு, மார்ச் 27

முல்லைத்தீவு – செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை அபகரித்து விகாரை மற்றும் புத்தர் சிலையை அமைத்துள்ள பௌத்த பிக்கு, செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய நிர்வாகத்துக்கு எதிராகவும் பிள்ளையார் ஆலயத்துக்கு வழிபாட்டுக்குச் சென்ற மக்களுக்கு எதிராகவும் முல்லைத்தீவுப் பொலிஸார் மூலம், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

தொல்பொருள் சின்னங்களைப் பிள்ளையார் ஆலயத்துக்கு வழிபாட்டுக்கு வந்தவர்கள் சேதப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இடம்பெற்றது.

இதில் பிள்ளையார் ஆலய நிர்வாகம் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி புவிதரன் மற்றும் சட்டத்தரணி குமார வடிவேல் குருபரன் உள்ளிட்டவர்கள் மன்றில் ஆஜராகிவாதாடியிருந்தார்கள்.

ஏற்கனவே பிள்ளயார் ஆலயத்தின் பெயர் மாற்றப்பட்டு கணதேவி தேவாலயம் எனப் பிக்குவால் பிள்ளையார் ஆலய முகப்பில் பெயர்ப்பலகை மாற்றப்பட்டிருந்தவேளை ஆலய நிர்வாகத்தினரால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளபோதும் பொலிஸார் அதற்கான விசாரணைகள் எதனையும் மேற்கொள்ளாது பௌத்த பிக்குவுக்கு மட்டும் சார்பாக செயற்பட்டுவருகின்றார்கள் என்றும் தற்போது இந்தப் புதிய வழக்கை பிக்குவுக்குச் சார்பாக முன்வைத்துள்ளனர் என்றும் மன்றின் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

கடந்த பல வருடமாகத் தொல்பொருள் சின்னம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள இந்தப் பிள்ளையார் ஆலயப் பகுதியை ஆக்கிரமித்து அங்கே அகழ்வு வேலைகளைச் செய்து விகாரை அமைத்துள்ள பிக்குவால் தொல்பொருள் சின்னங்களுக்குச் சேதம் ஏற்படவில்லையா? எனவும் மன்றின் முன் தமது வாதங்களை முன்வைத்தனர்.

இரண்டு தரப்பின் விவாதங்களையும் செவிமடுத்த நீதிவான் வழக்கை எதிர்வரும் 28.ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார் .

தொல்பொருள் திணைக்களம் சார்பில் அதிகாரிகள் பலரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். (ஐ)

# தென் மாகாண சபை உறுப்பினர்கள் நேற்று சவப்பெட்டியுடன் போராட்டம்




கொழும்பு, மார்ச் 27

அரசின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைக் கண்டித்தும் தேர்தல் ஒத்தி வைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தென் மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்று மாகாண சபை முன்பாகச் சவப்பெட்டியை வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பிய அவர்கள் மலர் வளையத்துடன் சபைக்குள் பிரவேசிக்க முயன்றனர். (ஐ)

# மின் தடை



யாழ்ப்பாணம் மார்ச் 27

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கூட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் –**

காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வமீன்காமம், பலாலி, காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வுகால விடுதி ஆகிய இடங்களிலும்–

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

கனகபுரம், உதயநகர், செல்வநகர் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

பெரிய கரைசல், புதுக்காமம் ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

இ.போ.ச கழக ஏற்பாட்டில்

# அரச நிறுவனங்களுக்கான உதைபந்து, துடுப்பாட்டம் கரப்பந்து போட்டிகள்

இ.போ.ச வட பிராந்திய விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது வருட நிறைவையொட்டி நடத்தப்படும் வட பிராந்திய எல்லைக்குட்பட்ட அரச நிறுவனங்களுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி, துடுப்பாட்ட சுற்றுப் போட்டி (மென்பந்து), கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி (Setup) ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

பங்குபற்ற விரும்பும் அரச நிறுவன அணிகளை உடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் விண்ணப்ப முடிவு எதிர்வரும் 5 ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு தலைவர்/ செயலாளர் இ.போ.ச. வட பிராந்திய விளையாட்டுக் கழகம், கோண்டாவில். (077 744 4061)

# புதுவருடத்திற்காக விடுமுறை நாள்களிலும் கடைகள் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்27

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டு வருடப் பிறப்பை முன்னிட்டு பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களை எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிகளில் உள்ள விடுமுறை நாள்கள் மற்றும் ஞாயிறு தினங்களில் வர்த்தகம் செய்வதற்கு ஏற்ற வகையில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரத்தில் ஈடுபடுமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (இ)

# சின்மயா மிஷனில் தியானப் பயிற்சி

யாழ் சின்மயா மிஷனில் சுவாமி சிதாகாசானந்தா அவர்களால் எதிர்வரும் 08 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 12.04.19 வெள்ளி வரை தியானப் பயிற்சி காலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை நடத்தப்பட உள்ளது. சின்மயா மின் அலுவலக தொலைபேசி 021 222 3447 / 077 857 3447 மூலம் பதிவுகளை மேற் கொள்ளலாம்.

அனுமதி இலவசம் என்றும் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயன் பெறலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ)




# உனக்கு நீதியும் மற்றவர்க்கு அநீதியுமா?

எம் மக்களின் வாழ்விலும் எமக்கும் பெருந்தலைவர்கள் என்று கூறப்படுகிறவர்கள் செய்கின்ற அநீதியான செயல் என்பது அரங்கேறி வரும் நிகழ்வுகளாக இருக்கின்றன. வாளெடுப்பவன் வாளாலே மடிவான் என்று; கூறிய இயேசு, ஒரு முறையல்ல எழுபது முறை மற்றவர்களை மன் னிக்கலாம். அதாவது எத்தனை முறையும் மன் னிக்கலாம் என்பதே அதன் விளக்கமாகும். தாய் தந்தை பிள்ளைகளை மன்னிப்பதில்லை. பிள் ளைகள் பெற்றோரை ஏற்றுக் கொள்ளவதில்லை.

சகோதரர் உறவுகளுக்கு இடையில் அயலவர்களுக்கு இடையில் மன்னிக்க முடியாத பிணக்குகள் சமூகத் தில் குரோதங்களை வளர்க்கின்றன. கடவுள் பக்தி இல்லை எவரையும் மதியாத நிலை, நான் என்ற அகம்பாவம், போட்டி பொறாமை, வன்முறைகள், தீமைகள் ஆதிக்கமே நீதியின் வழி சொல்கின்றது.

எல்லோர்க்கும் சமநீதி கிடைத்திட அதிகாரம் தாங்குவோர் உண்மையுடன் செயற்பட்டு பாதிக்கப்பட்டவர்கள் மீட்புப் பெற உழைத்திட இறைவனை இறைஞ்சுவோம். இறுகிய நெஞ்சங்கள் இளகிய நெஞ்சங்களாக மாற்றம் பெற, இடைவிடாது இறைவேண்டல் செய்வதன் வழியாக பொதுநீதி தளைத்தோங்க இத் தவக்கால திருயாத்திரைகளில், தான தருமச் செயல்கள் மூலமாக இறை இரக்கத்தை அடைந்திட முனைவோம்.

**- அன்ரனி பீற்றர்**
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்

# இடைத் தேர்தல் முடிவுகளை அடுத்து தமிழகத்திலும் உடன் ஆட்சி மாற்றம்

## ஸ்டாலின் முதல்வராவார் என்கிறது கம்யூனிஸ்ட் கட்சி





நாடாளுமன்றத் தேர்தலுடன் தமிழகத்தில் நடைபெறும் 18 தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் வெற்றிபெற்று மாநிலத்தில் தி.மு.க. ஆட்சி அமைப்பது உறுதி என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் கூறியுள்ளார்.

திருவாரூரில் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நாகை நாடாளுமன்றத் தொகுதி மற்றும் திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்கான செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு: -

தி.மு.க. தலைமையில் அமைந்துள்ள கூட்டணி அமைப்பு ரீதியாக அமைந்துள்ள கூட்டணி. எந்த ஒரு கட்சியையும் தி.மு.க.விலை கொடுத்து வாங்கவில்லை. ஆனால் அ.தி.மு.க அமைத்துள்ள கூட்டணி பண பலத்தால் அமைந்துள்ளது.

மத்தியில் ஆளும் மோடி அரசு ஜுன் 3 ஆம் திகதி சட்ட ரீதியாக முடிவுக்கு வருகிறது. மத்திய அரசின் ஊதுகுழலாக தமிழக அரசு உள்ளது.

பிரதமர் மோடிக்கு எடுபிடியாக இருக்கும் எடப்பாடி அரசு வருகிற 18 சட்டமன்ற இடைத்தேர்தலின் முடிவோடு பதவியிழக்கும். தி.மு.க. தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது உறுதி. இடைத்தேர்தலில் எடப்பாடி பழனிச்சாமியின் ஆட்சி போய் விடும். பிறகு தி.மு.க. தலைவர் ஸ்டாலின் அரசமைப்புச் சட்டத்தின் படி சட்டரீதியாக முதலமைச்சராக பதவி ஏற்பார் - என்றார்.


# அத்வானி, மனோகர் ஜோஷியை முற்றாக ஓரம் கட்டியது பா.ஜ.க.

லக்னோ,மார்ச்27

நடைபெறும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் உத்தர பிரதேச மாநிலத்துக்கான பாரதீய ஜனதாக் கட்சி நட்சத்திர பிரசாரகர்கள் பட்டியலில் கட்சியின் மூத்த உறுப்பினர்களான அத்வானி, முரளி மனோகர் ஜோஷி போன்றோரின் பெயர் இடம்பெறவில்லை.

உத்தர பிரதேச மாநிலத்துக்கான பா.ஜ.க. நட்சத்திர பிரசாரகர்கள் பட்டியலை அக்கட்சி வெளியிட்டுள்ளது. 40 பேர் கொண்ட இந்த பட்டியலில், பிரதமர் மோடி, அமித்ஷா, ராஜ்நாத்சிங், நிதின் கட்காரி, அருண்ஜெட்லி, சுஷ்மா சுவராஜ், உமாபாரதி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

வியப்பூட்டும் வகையில், இந்த பட்டியலில்,



பா.ஜ.கவின் மிக மூத்த தலைவர்களான அத்வானி, முரளி மனோகர் ஜோஷி ஆகியோரின் பெயர் இடம் பெறவில்லை. ஏற்கனவே, காந்திநகர் தொகுதியில் அத்வானிக்கு போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டு அமித்ஷா வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

அத்வானியும் தனக்கு காந்தி நகர் தொகுதியில், இடம் மறுக்கப்பட்டதால், கடும் அதிருப்தியில் இருக்கிறார் என ஊடகங்களில் செய்தி வெளியாகி இருந்தன. இந்த நிலையில், நட்சத்திர பிரசாரகர்கள் பட்டியலிலும் அத்வானி பெயர் இடம் பெறாதமை அக்கட்சி வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மும்பையிலிருந்து சிங்கப்பூர் சென்ற விமானத்தில் வெடிகுண்டு மிரட்டல்!



மும்பையில் இருந்து சிங்கப்பூர் சென்றச்விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்தமை தொடர்பாக பெண் பயணியிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சிங்கப்பூர் ஏர்லைன்ஸுக்குச் சொந்தமான போயிங் ரக பயணிகள் விமானம் நேற்று மதியம் மும்பை சத்ரபதி சிவாஜி விமான நிலையத்தில் இருந்து சிங்கப்பூர் நோக்கி முன்தினம் புறப்பட்டு சிங்கப்பூர் சென்றது. அதில் 263 பயணிகள் பயணம் செய்தனர். புறப்பட்ட சிறிது நேரத்தில் விமான நிறுவனத்திற்கு ஓர் அழைப்பு வந்துள்ளது. அதில் பேசிய நபர், மும்பையில் இருந்து சிங்கப்பூர் நோக்கிச் செல்லும் விமானத்தில் வெடிகுண்டு வைத்திருப்பதாக கூறியுள்ளார். இதனால் அதிகாரிகள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

உடனடியாக, விமானத்தின் பைலட்டுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு உஷார்படுத்தப்பட்டது. சிங்கப்பூர் வான் பகுதிக்குள் விமானம் நுழைந்ததும், விமானப் படையின் உதவியுடன் அந்த விமானம் சாங்கி விமான நிலையத்தில் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டது.

பயணிகள் அனைவரையும் உடனடியாக கீழே இறக்கிச் சோதனையிட்டனர். விமானத்தையும் முழுமையாக சோதனையிட்டனர். இந்தச் சோதனையில் விமானத்தில் எந்த வெடிபொருளும் சிக்கவில்லை. எனவே, வெடிகுண்டுமிரட்டல் போலி என்பது தெரியவந்தது.

வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது தொடர்பாக, குழந்தையுடன் வந்த ஒரு பெண் பயணியிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# தேர்தல் கருத்துக் கணிப்பு வெளியிடக் கட்டுப்பாடு!

தமிழ்நட்டில் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாகக் கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியிட ஏப்ரல் 9 ஆம் திகதியே கடைசி நாள் என்று தமிழகத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் மக்களவைத் தேர்தல் 7 கட்டங்களாக ஏப்ரல் 11 முதல் மே 19 வரை நடைபெற இருக்கிறது. தேர்தல் முடிவுகள் மே 23 ஆம் திகதி அறிவிக்கப்பட இருக்கின்றன.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் கருத்துக்கணிப்பு முடிவுகள் வெளியிடுவதில் ஊடகங்கள் தீவிரமாக ஆர்வம் காட்டி வருகின்றன. இந்தக் கருத்துக்கணிப்பு முடிவுகள் மக்கள் மீது தாக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே சில கருத்துக்கணிப்புகள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் தமிழகத்தில் கருத்துக்கணிப்பு முடிவுகள் வெளியிட ஏப்ரல் 9 ஆம் திகதியே கடைசி நாள் என்று தமிழகத் தேர்தல் அதிகாரி கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய சத்யபிரதா சாஹு "முதல் கட்டப் பிரசாரம் முடியும் நாளான ஏப்ரல் 9 வரை மட்டுமே கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியிடப்படலாம். அதிலிருந்து மே 19 வரை கருத்துக்கணிப்பு முடிவுகள் வெளியிடப்படக் கூடாது" எனக் கூறியுள்ளார்.

# ஸ்ரீபெரும்புதூர் அருகே விஷ வாயு தாக்கி தந்தை, மகன் உட்பட அறுவர் உயிரிழப்பு

ஸ்ரீபெரும்புதூர், மார்ச்27

ஸ்ரீபெரும்புதூர் அருகே கழிவுநீர் தொட்டியில் விஷ வாயு தாக்கியதில் தந்தை, மகன்கள் உட்பட 6 பேர் பலியானசம்பவம்சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீபெரும்புதூர் செல்வ பெருமாள் நகரில் வசித்து வருபவர் கிருஷ்ணமூர்த்தி (வயது 45). இவருக்கு 2 மகன்கள் உள்ளனர்.

நேற்றுக் காலை அவர் வீட்டில் உள்ள கழிவுநீர் தொட்டியை சுத்தப்படுத்த லொரியை வரவழைத்து இருந்தார். தொழிலாளிகள் பாதி அளவு கழிவுகளை எடுத்துக் கொண்டு லொரியை எடுத்துச் சென்றனர்.

எவ்வளவு கழிவு எடுக்கப்பட்டுள்ளது என்று பார்ப்பதற்காக கிருஷ்ண மூர்த்தி தொட்டியை எட்டிப் பார்த்தார். அப்போது அவர் மீது விவாயுதாக்கியது. மயக்கம் அடைந்த அவர் கழிவுநீர் தொட்டிக்குள் விழுந்தார். இதனை கண்ட அவரது 2 மகன்களும் காப்பாற்ற முயன்றனர். அவர்களும் விஷ வாயு தாக்கி தொட்டிக்குள் விழுந்தனர்.

அதிர்ச்சி அடைந்த பக்கத்து வீட்டில் வசித்த 3 ஆண்கள் கழிவுநீர் தொட்டிகளில் இறங்கி கிருஷ்ண மூர்த்தியையும், அவரது 2 மகன்களையும் மீட்க முயன்றனர். அவர்களும் விஷ வாயு தாக்கி பலியானார்கள்.

அடுத்தடுத்து 6 பேர் விஷ வாயு தாக்கி பலியான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# சதீஷ்கரில் மாவோயிஸ்ட் நான்கு பேர் சுட்டுக்கொலை



சுக்மா,மார்ச்27

சத்தீஷ்கரில் பாதுகாப்பு படையினருடன் நடைபெற்ற என்கவுண்டரின் போது 4 மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சத்தீஷ்கர் மாநிலத்தின் சுக்மா மாவட்டத்தில் உள்ள பிமாபுரம் பகுதியில் மாவோயிஸ்டுகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச்சண்டை நடைபெற்றது.

இந்தத் துப்பாக்கிச்சண்டைக்கு பிறகு மாவோயிஸ்டுகளின் 4 உடல்களை பாதுகாப்பு படையினர் மீட்டனர். சுட்டுக்கொல்லப்பட்ட மாவோயிஸ்டுகளிடம் இருந்து ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் மாவோயிஸ்டுகள் அப்பகுதியில் உள்ளனரா என்று பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆங்கிலம் 3 மாத சனி, ஞாயிறு மற்றும் வாரநாள் வகுப்புக்கள்

O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள், தொழில்புரிவோர், ஆசிரியர்கள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்

ஆங்கிலத்தில் ஓரெழுத்துத் தெரியாதவர்களும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேச முடியும்

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 30.03.2019 சனி

காலை : 08 - 10 மாலை: 03 - 05

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேச முடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கு உத்தரவாதம்!

29.03.2019 இற்கு முன் முன்பதிவு செய்பவர்களே புதிய பிரிவில் இணைக்கபடுவர்.

SAMSON Experts in English Training

403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ். நகர்.

021 222 4282
077 621 4567

காலைக்கதிர்
Kalaikathir
புதன்கிழமை
27.03.2019 07

# அமெ. வான்வழித் தாக்குதலில் ஆப்கனில் 10 குழந்தைகள் பலி

## ஐக்கிய நாடுகள் சபை தரப்பில் தகவல்


ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திய வான்வழித் தாக்குதலில் 10 குழந்தைகள் பலியாகி உள்ளன என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபை தரப்பில், "ஆப்கானிஸ்தானின் வடக்குப் பகுதியில் உள்ள குண்டுஸ் தலிபான்களின் ஆதிக்கம் நிறைந்த பகுதியாக உள்ளது. இந்தப் பகுதியில் அமெரிக்கப் படைகள் கடந்த 30 மணி நேரத்தில் நடத்திய வான்வழித் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர். இதில் 10 பேர் குழந்தைகள்" என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தத் தாக்குதல் குறித்து நேட்டோ படையின் செய்தித் தொடர்பாளர் ரிச்சர்ட்சன் கூறும்போது, "குடிமக்களைக் காப்பற்ற வேண்டும் என்பதுதான் எங்களது நோக்கம். ஆனால் தலிபான்கள் பொதுமக்களை வேண்டும் என்றே மனித கவசங்களாகப் பயன்படுத்துகின்றனர்" என்றார்.

கடந்த வருடங்களாக ஆப்கானிஸ்தானில் வான்வழித் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன எனவும், இதன் காரணமாக இங்கு குழந்தைகள் இறப்பு அதிகரித்து வருவதாகவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

## பட்டுப்பாதை வர்த்தகத்தில் இணைந்தது இத்தாலி



சீனாவின் புதிய பட்டுப்பாதை வர்த்தகத்தில் இணைவது தொடர்பான ஒப்பந்தத்தில் இத்தாலி கையெழுத்திட்டுள்ளது.

ஆசியாவில் இருந்து ஐரோப்பா வரை தடையற்ற வர்த்தகத்திற்காக சீனா பட்டுப்பாதைத் திட்டத்தை வகுத்து வருகிறது. இந்நிலையில் 'ஜி-7' நாடுகள் அணியைச் சேர்ந்த முதல் நாடாக இத்தாலி சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தில் இணைந்துள்ளது.

ரோம் நகரில் சீன அதிபர் சீ ஜின் பிங் இத்தாலியப் பிரதமர் குய்செப் கான்டேயுடன் நடத்திய பேச்சை அடுத்து, ஐநூறு முதல் எழுநூறு கோடி யூரோ வரையிலான பெறுமதியுடைய விடயங்கள் ஒட்டி 29 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லண்டனில் இருந்து ஜேர்மனிக்கு புறப்பட்ட விமானம் ஸ்கொட்லாந்தில் இறங்கியது

லண்டனில் இருந்து ஜேர்மனியின் டுஸில்டோர்ப் நகருக்கு செல்ல வேண்டிய பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் 965 கிலோ மீற்றர் தூரம் பயணித்து ஸ்கொட்லாந்தின் எடின்போர்க் நகரில் தரையிறங்கியுள்ளது.

விமானிக்குத் தவறான பயணப் பாதை கொடுக்கப்பட்டதால் இந்தத் தவறு நிகழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபோன்ற ஒரு சம்பவம் இதற்கு முன்னர் நடந்ததே இல்லை என்றும் நடந்தது குறித்து பயணிகளிடம் மன்னிப்பு கேட்பதாகவும் அவர்களுக்காக மாற்று பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்றும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் தெரிவித்துள்ளது.



இதற்குகாரணம், விமானத்தை நடத்தி வரும் துணை ஒப்பந்த நிறுவனத்தின் தவறான வழிகாட்டுதல் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், தவறான விமானத் திட்டம் ஏன் தாக்கல் செய்யப்பட்டது என்பது குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்நிறுவனம் கூறியுள்ளது.


வாடிக்கையாளர்கள் தங்கள் பயணத்திற்கான இடையூறுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்வதாகவும், இந்த நிகழ்வு துரதிஷ்டவசமானது என்றும் வருத்தம் தெரிவித்துள்ளது பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனம்.

(உ)

# வெடிமருந்துக் களஞ்சியத்தில் தீ! மியன்மாரில் 16 பேர் கருகிச் சாவு

## 48 பேர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்





யாங்கோன், மார்ச்27

மியன்மாரில் வெடிமருந்துக் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 16 பேர் பலியாயினர்.

மியன்மாரின் கிழக்கு பகுதியில் சீனாவின் எல்லையையொட்டி உள்ள ஷான் மாகாணம், மாங்மாவோ நகரில் வெடி மருந்துகள் மற்றும் எரிவாயு சிலிண்டர்கள் சேமித்து வைக்கும் கலஞ்சியம் உள்ளது.

ஞாயிறு மாலை வெடிமருந்தை எடுத்துச் செல்வதற்காக 60 க்கும் மேற்பட்டோர் களஞ்சியத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் வெடிமருந்தை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, திடீரென அங்கு வெடி விபத்து நேரிட்டது.

அதனை தொடர்ந்து களஞ்சியத்துக்குள் தீப்பற்றி கொழுந்துவிட்டு எரிந்தது. களஞ்சியத்துக்குள் இருந்த அனைவரும் வெளியேற முடியாமல் உள்ளே சிக்கிக்கொண்டனர்.

இதுபற்றி தகவல் அறிந்ததும் தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்பு குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். ஆனால் அதற்குள் 16 பேர் தீயில் கருகி பரிதாபமாக இறந்துவிட்டனர்.

மேலும் 48 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## 3 மாதங்களில் 43 பேருக்கு தலைதுண்டித்து மரணதண்டனை

சவுதியில் போதைப் பொருள் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் 21 பேருக்கு தலை துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

சவுதியில் நடப்பாண்டில் கடந்த 3 மாதங்களில் மட்டும் பல்வேறு குற்றச் சம்பவங்களுக்காக 43 பேர் தலை துண்டிக்கப்பட்டு மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

வளைகுடா நாடுகளில் போதைப் பொருள், பலாத்காரம், கொலை மற்றும் கொள்ளை போன்ற கொடிய குற்றங்களுக்கு கடும் தண்டனை விதிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சவுதி அரேபியாவில் கடந்த ஓர் ஆண்டில் 172 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இதனிடையே கடந்த 3 மாதங்களில் போதைப் பொருள் கடத்தினர் என 21 பேருக்கு, மதத்தை இழிவுபடுத்தல், தீவிரவாதம், பாலியல் குற்றச்சாட்டு காரணமாக 22 பேருக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

## இந்தோஷேியாவில் நேற்று தொடர் நிலநடுக்கங்கள்

இந்தோனேஷியாவில் வடமேற்கில் உள்ள பென்டோலோ நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 5.4 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.


அடுத்த 3 மணிநேர இடைவெளியில் சுலவேசி தீவில் உள்ள பிட்டுங் நகரில் 5.4 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் நிகழ்ந்தது. தொடர்ந்து கிழக்கு பகுதியில் அமைந்துள்ள வடக்கு மலுக்கு பகுதியில் 6.3 ரிச்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கங்களால் அப்பகுதிகளில் உள்ள கட்டடங்கள், வீடுகள் சேதமடைந்துள்ளன. நிலநடுக்கங்களால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் பொருள்சேதம் தொடர்பான உடனடி தகவல் ஏதும் வெளியாகவில்லை. அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்களால் இந்தோனேஷியா மக்கள் பீதியடைந்துள்ளனர்.

மேலும் இந்தோனேஷியாவில் ஏற்படுகின்ற நிலநடுக்கங்கள் சுனாமி ஏற்படுவதற்கு வழிகோலும் என இந்தோனேஷியா அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது

# கிரேக்கப் பிரதமர் சென்ற ஹெலிக்கு துருக்கி விமானங்களால் தொந்தரவு!

## தாழப் பறக்குமாறு நிர்ப்பந்தித்தனவாம்



சுதந்திர தின நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக தான் சென்ற ஹெலிகாப்டருக்கு துருக்கியின் போர் விமானங்கள் 'தொந்தரவு' கொடுத்தன என கிரேக்க பிரதமர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) கிரேக்கத்தின் வான் எல்லைக்குள் நுழைந்த துருக்கியின் போர் விமானங்கள், தனது ஹெலிகாப்டரை 'தாழ்ந்து பறக்கும்' நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கின என கிரேக்கப் பிரதமர் அலெக்சிஸ் சீப்ரஸ் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமின்றி, துருக்கியின் செயலை அவர், அர்த்தமற்ற, முட்டாள்தனமான நடவடிக்கை என்றும் குறிப்பிட்டுள்ளார். அலெக்சிஸ்ஸின் குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு தெரிவித்துள்ள துருக்கி ராணுவம், தங்கள் நாட்டுப் போர் விமானங்கள் வழக்கமான ஒத்திகையிலேயே ஈடுபட்டன எனத் தெரிவித்துள்ளது.

கிரேக்கம் மற்றும் துருக்கியின் எல்லைக்கு அருகே மத்தியத் தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள ஈஜியன் தீவு தொடர்பாக இருநாடுகளுக்கிடையே பல தசாப்தங்களாக பிரச்சினை நீடித்து வரும் நிலையில், இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

# ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கியுள்ளமை தவறானது

## தமிழகத்தின் 'தினமணி' நாளிதழ் கருத்து

ஏறத்தாழ ஒரு லட்சம் பேருக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டும், அதே அளவிலான பொதுமக்கள் வீடு, வாசலை இழந்து அநாதைகளாக்கப்பட்டும் மிகப் பெரிய மனித உரிமை மீறல் நிகழ்ந்திருக்கும் நிலையில், இலங்கையில் சிறப்பு நீதிமன்றம் அமைவதற்கு ஐ.நா.வின் மனித உரிமை கவுன்சில் மேலும் கால அவகாசம் வழங்கியிருப்பது தவறு. 10 ஆண்டுகள் கழிந்தும் நீதி வழங்கப்படவில்லை எனும்போது, தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி என்றுதான் கருத வேண்டியிருக்கிறது.

இப்படிக் கூறியுள்ளது தமிழகத்தில் இருந்து வெளிவரும் தமிழ்த் தினசரியான தினமணியின் ஆசிரியர் தலையங்கம்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்து 10 ஆண்டுகளான பிறகும்கூட இன்னும் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தப்படாமல் இருப்பது வேடிக்கையாகவும், வேதனையாகவும் இருக்கிறது. கடந்த வியாழக்கிழமை ஜெனீவாவில் கூடிய ஐ.நா. சபையின் மனித உரிமைக் கவுன்சில், ஈழ விடுதலைப் போர் குறித்த குற்றங்களை விசாரிக்க இலங்கைக்கு மேலும் இரண்டாண்டு அவகாசம் வழங்கியிருப்பது எதிர்பாராத அதிர்ச்சி. இப்படி விசாரணைக்கான கால அவகாசம் நீடிக்கப்படுவது இது இரண்டாவது முறை.

இலங்கையில் 1983 ஜூலை 23 ஆம் திகதி தொடங்கிய இலங்கை உள்நாட்டுப் போர் அல்லது ஈழ விடுதலைப் போர் ஏறத்தாழ 26 ஆண்டுகள் தொடர்ந்தது. இலங்கை அரசுக்கு எதிராக விடுதலைப் புலிகளால் வடக்கு – கிழக்குப் பகுதிகளில் நடத்தப்பட்ட கெரில்லா யுத்தம் 2009 மே மாதம் முடிவுக்கு வந்தது. கால் நூற்றாண்டுக்கும் மேலாக நடைபெற்ற உள்நாட்டுப் போரில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழும் தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

ஏறத்தாழ 80,000 இலிருந்து ஒரு லட்சம் பேர் அந்த இடைப்பட்ட காலத்தில் கொல்லப்பட்டிருக்கிறார்கள் எனச் சில புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஐ.நா. சபையின் குழு ஒன்று நடத்திய மதிப்பீடு உள்நாட்டுப் போரின் கடைசி கட்டத்தில் மட்டும் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிவிக்கிறது.

ஐ.நா. சபை உள்ளிட்ட பல அமைப்புகளும் உயிரிழப்புகள் குறித்து ஆய்வுகள் நடத்தி அறிக்கைகள் வெளியிட்டாலும்கூட, இலங்கை அரசு அவற்றை ஏற்றுக்கொள்வதாக இல்லை. பொதுமக்களுக்கு எந்த விதபாதிப்பும் இல்லாத வகையில் இலங்கை ராணுவம் மிகவும் கவனமாக விடுதலைப் புலிகள் மீது மட்டுமே தாக்குதல் நடத்தியதாகவும், பெருமளவு உயிர்ச்சேதம் எதுவும் தங்களால் ஏற்படவில்லை என்றும் அரசும் ராணுவமும் பிடிவாதம் பிடிக்கின்றன.

கடைசி கட்டப் போர் முடிவடைந்தபோது மூன்று லட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் வவுனியா மாவட்டத்திலுள்ள முகாம்களுக்கு வலுக்கட்டாயமாக மாற்றப்பட்டனர். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தனியார் நிலங்கள் ராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டு சுற்றிலும் முள்வேலி அமைக்கப்பட்டது. அடைக்கப்பட்ட பொதுமக்களில் பலரும் முகாம்களிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டாலும்கூட, ராணுவம் கையகப்படுத்திய நிலங்கள் இன்னும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை.

ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலாளர் பான் கீ மூன், இலங்கையின் உள்நாட்டுப் போரின் கடைசி கட்டத்தில் நடந்த வரம்பு மீறல்கள் குறித்து விசாரிக்க ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழுவின் அறிக்கை இலங்கையில் மனித உரிமை மீறப்பட்டதற்கான அடிப்படை ஆதாரங்கள் இருக்கின்றன என்றும் அது குறித்து ஐ.நா. விசாரிக்கலாம் என்றும் பரிந்துரை செய்தது.

அந்தக் குழு, சர்வதேச சட்ட மீறல்கள் குறித்து விசாரிப்பதற்காக சர்வதேச அளவிலான விசாரணையை நடத்தும்படி ஐ.நா.வின் பொதுச்செயலாளருக்கு பரிந்துரை செய்திருந்தது. ஆனால், இலங்கை அரசோ தனது ராணுவம் எந்தவித போர்க் குற்ற நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்பதிலும், சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொள்வதில்லை என்பதிலும் பிடிவாதமாக இருக்கிறது. ஏற்கெனவே இலங்கை அதிபரால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையம், 1983 முதல் 2009 வரையிலான உள்நாட்டுப் போர் குறித்து விசாரணை நடத்தி அறிக்கையை இலங்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டதால், ஐ.நா. அறிக்கைக்கு தேவையே இல்லை என்பது இலங்கை அரசின் வாதம்.

ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் கூறியிருப்பதுபோல விசாரணை நடத்துவதற்கு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும். இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை குறித்து விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்களில் வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெறுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார். அப்படியொரு சர்வதேச அளவிலான நீதிமன்றம் அமையாமல் போனால், இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கும் போர்க் குற்றங்களுக்கும் முறையான விசாரணையோ, தீர்ப்போ கிடைக்காது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சுமந்திரன் கூறுவதுபோல, அப்படியொரு சிறப்பு நீதிமன்றத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளாமல் போனால், அது குறித்து சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் முறையிட முடியும். வெளிநாட்டு நீதிபதிகளுடன் கூடிய சிறப்பு நீதிமன்றத்தை அமைக்க இலங்கை அரசு ஒப்புக்கொள்ளாவிட்டால், சர்வதேச விசாரணைக் குழு இலங்கையின் போர்க் குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்கிற கோரிக்கையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்திருக்கிறது.

இலங்கை அரசு, தனது அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்க தானே நீதிமன்றத்தை அமைப்பது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோல, வெளிநாட்டு நீதிபதிகள் அடங்கிய சிறப்பு நீதிமன்றம் அமைவதை இலங்கையின் அரசமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் ஏற்புடையதல்ல.

ஏறத்தாழ ஒரு லட்சம் பேருக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டும், அதே அளவிலான பொதுமக்கள் வீடு, வாசலை இழந்து அநாதைகளாக்கப்பட்டும் மிகப் பெரிய மனித உரிமை மீறல் நிகழ்ந்திருக்கும் நிலையில், சிறப்பு நீதிமன்றம் அமைவதற்கு ஐ.நா.வின் மனித உரிமை கவுன்சில் மேலும் கால அவகாசம் வழங்கியிருப்பது தவறு. 10 ஆண்டுகள் கழிந்தும் நீதி வழங்கப்படவில்லை எனும்போது, தாமதிக்கப்பட்ட - நீதி மறுக்கப்பட்ட நீதி என்றுதான் கருத வேண்டியிருக்கிறது.- என்றுள்ளது.

# முன்பு செய்த பாவங்களே மின் தடைக்குக் காரணம்

## மின்சக்தி அமைச்சர் கருத்து



கொழும்பு, மார்ச் 27

மின் விநியோகத் தடைக்குக் காரணம் முன்பு செய்த பாவங்களேயென மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.


நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்– 2014ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மின்சார உற்பத்தித் துறை அபிவிருத்தி செய்யப்படவில்லை. இதன் காரணமாக தற்போது மின் துண்டிப்பு நேரம் 4 மணித்தியாலங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த 4 மணித்தியால மின் துண்டிப்பின் காரணமாக பொது மக்கள் அதிக சிரமங்களுக்குள்ளாகியுள்ள நிலையில், வர்த்தகத்துறை அதிகளவில் பாதிப்படைந்துள்ளது.

அத்தோடு பிரதானமாக குளிரூட்டியை மையமாக வைத்து வர்த்தகத்தில் ஈடுபடும், வர்த்தக நிலையங்களில் குளிரூட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பொருள்களில் பலவற்றை வெளியேற்றிவரும் நிலையை தற்போது அவதானிக்க முடிகிறது.

மே மாத இறுதிக்குள் போதியளவு மழை பெய்யாதுவிடின், மின் துண்டிப்பு நேரத்தை நீடிக்க வேண்டிய நிலை ஏற்படும் – என்றார். (ஐ)



தினமும் உடற்பயிற்சி செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை நாவலப்பிட்டி நகரசபை மைதானத்தில் குத்துச் சண்டைப் பயிற்சியில் ஈடுபட்டார்.

# இராணுவ குடும்பங்களுக்கு மட்டக்களப்பில் 39 வீடுகள்

மட்டக்களப்பு, மார்ச் 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ குடும்பங்களுக்காக அமைக்கப்பட்ட 39 வீடுகள், எதிர்வரும் 10ஆம் திகதி உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளன என ரணவிரு சேவா அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலர் ரீ.எச்.கீர்த்திகா ஜயவர்த்தன தெரிவித்தார்.

ரணவிரு சேவா சங்கத்தின் ஊடாக வீடுகள் வழங்கப்படவுள்ளவர்களுக்கான கூட்டம், நேற்றுக் காலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் ரணவிரு சேவா அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலர் ரீ.எச். கீர்த்திகா ஜயவர்த்தன தலைமையில் நடைபெற்றது.

இதில் மட்டக்களப்பு மாவட்ட ரணவிரு சேவா அமைப்பின் தலைவர் எஸ்.ஏ.சி.அப்துல் வஹாப், ரணவிரு சேவா அதிகார சபையின் உறுப்பினர்கள், இராணுவப் பயனாளிக் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், 'ரணவிரு சேவா' பயனாளிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 39 குடும்பங்களுக்கும், தலா 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டு வழங்கப்படவுள்ளன.

அந்தவகையில் நடைபெறவுள்ள திறப்புவிழாவில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டு மக்களுக்கு வழங்கவுள்ளனர். (ஐ)

# கல்வாரித் திருத்தலத்தின் வழிபாடு வவுனியாவில்

வவுனியா, மார்ச் 27

மன்னார் மறைமாவட்டத்தின் வவுனியா கோமரசங்குளம் கல்வாரி திருத்தல தவக்கால யாத்திரை எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

நாளை காலை ஐந்து மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் பாத யாத்திரை ஆரம்பமாகி பல்வேறு தேவாலயங்களைத் தரிசித்து 29ஆம் திகதி காலை ஐந்து மணிக்கு நற்கருணை வழிபாடு புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்று சிலுவைப் பாதை ஆரம்பமாகி காலை 11.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

ஆறாம் வெள்ளி வழிபாடுகள் ஏப்ரல் 12ஆம் திகதி இடம்பெறவுள்ளது. எனவே கல்வாரி திருத்தலத்தில் இடம்பெறும் தவக்கால வழிபாடுகளில் அனைவரும் கலந்து கொள்வதற்குச் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக பெரிய கோமரசங்குளம் கல்வாரி திருத்தலத்தின் பரிபாலகர் அருட்பணி ம.செல்வநாதன் பீரிஸ் தெரிவித்துள்ளார். (ஐ – 100)

## தோட்டத் தொழிலாளர்கள் சந்தாப் பணத்தில் மோசடி!

### மலையக மக்கள் முன்னணியில் சர்ச்சை

கொழும்பு, மார்ச் 27

மலையக மக்கள் முன்னணியின் தொழிற் சங்கமான மலையக தொழிலாளர் முன்னணியில் தொழிலாளர் சந்தாப் பணத்தில் மோசடி இடம் பெற்றுள்ளதாக அந்தக் கட்சியின் உள்ளக வட்டாரங்கள் மூலம் நம்பகமாக அறியமுடிகின்றது.

இந்த மோசடி குறித்து ஏற்கனவே கட்சிக்குள் உள்ளக விசாரணைகள் நடத்தப்பட்டன என்றும் அதன்படி மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச் செயலாளர் தொழிலாளர் சந்தா நிதியைக் கையாடி இருக்கிறார் என்றும் தெரியவந்துள்ளது.

அண்மையில் நுவரெலியாவில் கூடிய மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் இந்த விடயத்தைத் தீவிரமாக ஆராய்ந்து அடுத்த கட்ட நவடிக்கையை எடுப்பது பற்றி பேசியுள்ளதாக மேலும் அறியமுடிந்தது.

சுமார் ஐம்பது லட்சம் ரூபா வரையான சந்தாப் பணத்துக்கு என்ன நடந்தது என்பது குறித்து எந்த ஆதாரங்களும் இல்லையென சொல்லப்படுகிறது.

தோட்டத்தொழிலாளர் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டுமென வலியுறுத்தப் பட்டு வரும் சூழ்நிலையில் இவ்வாறு தொழிலாளர் சந்தாப் பணம் கையாடல் நடந்திருப்பது முன்னணிக்குள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதாக மேலும் தெரியவருகிறது. (ஐ)

## இந்த வாரம் அமெரிக்கா பயணமாகிறார் கோட்டா!

### குடியுரிமை சர்ச்சைக்கும் முற்றுப்புள்ளி



கொழும்பு, மார்ச் 27

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ இந்த வாரம் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கலிபோர்னியாவில் நடைபெறவுள்ள திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்கச் செல்லும் அவர், இந்தப் பயணத்தின் போது அமெரிக்க அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக, கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்க குடியுரிமையைத் துறக்கும் ஆவணங்களை கடந்த 6ஆம் திகதி அமெரிக்கத் தூதரகத்தில் கையளித்துள்ளார்.

இந்த விண்ணப்பம் தற்போது அமெரிக்க அதிகாரிகளின் பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் அமெரிக்கா செல்லும் அவர், அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்து தமது குடியுரிமை துறப்பு விண்ணப்பம் குறித்து கலந்துரையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடியுரிமை துறப்பு தொடர்பான செயல்முறைகளை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் முடித்து விட முடியும் என்று கோட்டா அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எரிபொருள் நிலையத்தில் அதிகாலை கொள்ளை

கொழும்பு, மார்ச் 27

காலி - பெலிகஹ சந்திக்கருகிலுள்ள எரிபொருள் நிரப்புநிலையத்தில் நேற்று அதிகாலை கொள்ளைச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

முகத்தை மறைத்தவாறு மோட்டார் சைக்கிளில் வந்த மூவரே இவ்வாறு கொள்ளையில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்த பொலிஸார், கொள்ளையிடப்பட்ட பணத்தொகை தொடர்பில் இன்னமும் தெரியாத நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனக் கூறினர். (ஐ)

## இந்திய மீனவர் 11 பேர் கைது



யாழ்ப்பாணம்,மார்ச்27

இலங்கை வடக்கு கடற்பரப்புக்குள் சட்ட விரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 11 பேரை, இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவும், நேற்று அதிகாலையும் இந்த மீனவர்கள் அனலைதீவுப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.

இவர்கள் வருகை தந்த இயந்திர படகுகள் மூன்று கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



ஹிங்குரக்கொட கல்வி வலயத்தில் அளுத்ஓய கனிஷ்ட பாடசாலையின் புதிய வகுப்பறைக் கட்டடம் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் நேற்றுமுன் தினம் முற்பகல் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.

வட மத்திய மாகாண ஆளுநர் சரத் ஏக்கநாயக்க உள்ளிட்ட அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களுடன் ஜனாதிபதி பாட்டுப் பாடி மகிழ்ந்தார். (ஐ)

## இந்திய – இலங்கை ராணுவத்தின் கூட்டுப் பயிற்சி நேற்று ஆரம்பம்



கொழும்பு, மார்ச் 27

இந்திய - இலங்கை இராணுவத்தினர் இணைந்து ஆண்டு தோறும் நடத்தும் மித்ரசக்தி என்ற கூட்டுப் பயிற்சியின் ஆறாவது கட்டம் நேற்றுத் தியத்தலாவவில் ஆரம்பமானது.

இதற்காக இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 120 பேர் நேற்று முன் தினம் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

ஏப்ரல் 8ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ள இந்தக் கூட்டுப் பயிற்சியில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 11 அதிகாரிகள் உள்ளிட்ட 120 படையினரும், இலங்கை இராணுவத்தின் கெமுனு காவல்படையின் 120 படையினரும் பங்கேற்கின்றனர்.

இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கும் பிகார் ரெஜிமெட்டின் 1 ஆவது பற்றாலியனைச் சேர்ந்த 120 இந்திய இராணுவத்தினரை ஏற்றிய, இந்திய விமானப்படையின் ஐ.எல். -76 விமானம் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்திய இராணுவத்தினருக்குப் பொறுப்பாக கேணல் பார்த்தசாரதி ராய், கேணல் சோம்பித் கோஷ், மேஜர் புஜம் மான்ஹாஸ், மேஜர் றோகித் குமார் திரிபாதி ஆகிய அதிகாரிகளும் கொழும்பு வந்துள்ளனர். (ஐ)

## 9 நாள்களுக்கு மட்டுமே மின்வெட்டு நடைமுறை

### அமைச்சர் ரவி கூறுகிறார்

நாடு முழுவதும் சுழற்சி முறையில் பகல் மற்றும் இரவுவேளை நடைமுறைப்படுத்தும் மின்வெட்டு 9 நாள்களுக்கு மட்டுமே நீடிக்கும் என மின்சக்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நீர்மின் உற்பத்தி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் போதிய மழை இல்லாமை காரணமாக இந்தச் சுழற்சி முறையிலான மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சூரிய மின்கலன் நிறுவனங்களின் பின்னணியிலேயே இந்த மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை மறுத்த அவர், 9 நாள்களுக்கு மட்டுமே தற்போதைய மின்வெட்டு கடைபிடிக்கப்படும் எனக் கூறினார்.

## போதைப்பொருள்களுக்கு முடிவு கட்ட ஏப்ரல் 3 முதல் அசுரவேகத்தில் தேடுதல்

### ஜனாதிபதி மைத்திரிபால அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

போதைப்பொருள்களை ஒழிப்பதற்கான திடீர் சுற்றிவளைப்பு, தேடுதல் வேட்டை ஆகியன ஏப்ரல் 3 ஆம் திகதி மேலும் விரிவுபடுத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு நகரிலும், கரையோரப் பிரதேசங்களை அண்டிய பகுதிகளிலும் முப்படையினரும் பொலிஸாரும் இணைந்து மிகவும் பலமான முறையில் இந்த சுற்றி வளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர் என்றும் கூறினார்.

ஹிங்குரக்கொட ஆனந்த மகளிர் கல்லூரியின் புதிய நீச்சல் தடாகத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி,

ஹெரோயின் போதைப்பொருள் சகிதம் கப்பலொன்றைப் படையினர் கைப்பற்றினர். எனினும், படையினர் சுற்றிவளைக்கவுள்ளனர் என்பதை அறிந்துகொண்டவர்கள் 500 கிலோ வரையான போதைப்பொருள்களைக் கடலில் கொட்டியுள்ளனர்.

இன்று பிரபலமான சில பாடசாலைகளில் உயர்தர மாணவர்கள் சிலர் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். இதனால், பாடசாலை நிர்வாகம் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அத்துடன், பெண் பிள்ளைகள் சிலரும் போதையை தேடும் நிலை உருவாகியுள்ளது.

எனவே, தமது பிள்ளைகள் குறித்து பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் கௌரவமானதொரு சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள போதைப்பொருள்களை ஒழிப்பதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கை ஏப்ரல் 3 ஆம் திகதி முதல் மேலும் விரிவுபடுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.


மாவட்டத்தில் உள்ள பாடசாலை பிள்ளைகளின் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் நோக்குடன் எழுச்சிபெறும் பொலன்னறுவை



மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 450 இலட்சம் ரூபா செலவில் மேற்படி நீச்சல் தடாகம் இக்கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து நீச்சல் தடாகத்தை மாணவர்களிடம் கையளித்த ஜனாதிபதி , மாணவர்களின் நிகழ்ச்சிகளையும் பார்வையிட்டார். (ஐ)

காலைக்கதிர்
Kalaikathir


# கிறிஸ் கெயில் அதிரடி கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு திரில் வெற்றி!

*2019ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடரின் 4வது போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 14 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.*

*ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகளுக்கிடையிலான இந்த போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.*

*இதற்கமைய துடுப்பெடுத்தாட களமிறங்கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 04 விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.*

*அந்த அணி சார்பில் அதிகபட்சமாக கிறிஸ் கெயில் 79 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.*

*இதனைத்தொடர்ந்து 185 என்ற வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களை பெற்று 14 ஓட்டங்களினால் தோல்வியடைந்துள்ளது.*

*அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ஜோஸ் பட்லர் 69 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார்.*

# ஆட்டத்தின் போக்கையே மாற்றிவிட்டார் ரிஷப் பந்த்

டெல்லி அணிக்கு எதிரான போட்டியில் நிறையத் தவறுகள் செய்துவிட்டோம் என்றும், ரிஷப் பந்த் ஆட்டத்தின் போக்கையே மாற்றிவிட்டார் என்றும் மும்பை அணித் தலைவர் ரோஹித் ஷர்மா கருத்து தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் தொடரின் 3ஆவது லீக் போட்டியில், மும்பை இந்தியன்ஸ் அணியை 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெல்லி கப்பிடல்ஸ் அணி வீழ்த்தியது. ரிஷாப் பந்த் டெல்லி அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தார்.

அவர் 27 பந்துகளில் 7 பவுண்டரி, 7 சிக்சர்களுடன் 78 ஓட்டங்கள் விளாசினார்.

இந்நிலையில் தோல்வி குறித்து மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவர் ரோஹித் ஷர்மா கூறுகையில்,

'முதல் ஆட்டம் பெரும்பாலான




அணிகளுக்கு சவாலானதாகவே இருக்கும். இந்த ஆட்டத்தில் நாங்கள் நிறைய தவறுகள் செய்தோம். முதல் 10 ஓவர்கள் ஆட்டம் எங்கள் கட்டுப்பாட்டில் தான் இருந்தது.

ரிஷப் பந்த் அதிரடியாக ஆட ஆரம்பித்த பிறகு ஆட்டத்தின் போக்கு மாறியது. எங்களது பந்துவீச்சு திட்டத்தை செயல்படுத்த முடியாமல் போனது. இந்த தவறில் இருந்து விரைவாக பாடம் கற்றுக்கொண்டு அடுத்த ஆட்டத்துக்கு நாங்கள் நல்ல நம்பிக்கையுடன் திரும்ப வேண்டும்.

ஆடுகளம் கடைசி வரை பேட்டிங்குக்கு நன்றாக தான் இருந்தது. யுவராஜ்சிங் அருமையாக ஆடினார். எங்களது முதல் 4 துடுப்பாட்ட வீரர்களில் யாராவது ஒருவர் 70 முதல் 80 ஓட்டங்கள் எடுத்து இருந்தால் ஆட்டத்தின் முடிவு வேறு மாதிரி இருந்திருக்கலாம்' என தெரிவித்துள்ளார்.

# ஓய்வு தொடர்பில் யோசிக்கவில்லை




இந்தியக் கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான யுவராஜ் சிங், தனது ஓய்வு குறித்து இன்னமும் முடிவு எடுக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களாக தேசிய அணியில் இடம்பெறமால் இருந்த யுவராஜ் சிங், தற்போது இந்தியாவில் நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் தனது உலகக்கிண்ண தொடருக்கான வாய்ப்பு மற்றும் ஓய்வு குறித்து அவரிடம் கேட்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்,

உலகக் கிண்ண தொடருக்கான இந்திய அணியில் ரிஷப் பந்துக்கு இடம் கிடைக்குமா? என்பது எனக்கு தெரியாது. கடந்த ஆண்டும் அவர் சிறப்பாகச் செயல்பட்டார். அவர் வெளிநாட்டில் நடந்த டெஸ்ட் போட்டியில் இளம் வயதிலேயே இரண்டு சதம் அடித்து தனது திறமையை நிரூபித்தார். அவர் வருங்காலத்தில் மிகச் சிறந்த வீரராக உருவெடுப்பார். அவரை கவனமாக வழிநடத்த வேண்டியது முக்கியமானதாகும்.

கடந்த 2 வருடங்களாக எனது கிரிக்கெட் வாழ்க்கையில் ஏற்ற, இறக்கங்களைச் சந்தித்து வருகிறேன். இதனால் அடுத்து என்ன செய்வது என்பது குறித்து நான் இன்னும் உறுதியான முடிவு எடுக்கவில்லை. அதற்கான நேரம் வரும்போது முதல் நபராக ஓய்வு முடிவை அறிவிப்பேன்.

கிரிக்கெட்டை இளம் வயது முதலே அனுபவித்து விளையாடுவதால் நான் தொடர்ந்து விளையாடி வருகிறேன். எனது ஓய்வு குறித்து குழப்பமான சூழ்நிலை ஏற்பட்ட போது டெண்டுல்கருடன் கலந்து ஆலோசித்தேன். அதில் எனக்கு நல்ல தெளிவு கிடைத்தது' எனக் கூறினார்.

ரி -20 போட்டிகளில் அதிவேக அரைச்சதம், ஆறு பந்துகளுக்கு ஆறு சிக்ஸர்கள், உலகக் கிண்ணத் தொடரில் தொடர் நாயகன் விருது என பல சாதனைகளுக்கு சொந்தக்காரரான யுவராஜ் சிங், மீது யார் கண்பட்டதோ, அவர் தற்போது தேசிய அணியில் இடம்பிடிப்பதற்கு திணறி வருகிறார்.

# லசித் மலிங்கவுக்கு உடனடி அழைப்பு

மும்பை இந்தியன்ஸ் உடனடியாக மலிங்கவை தங்களது அணியில் விளையாட அனுமதிக்குமாறு" கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து, இலங்கை கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவித்துள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது.


டெல்லி கப்பிடல்ஸ் அணிக்கு எதிராக நேற்று முன் தினம் நடந்த லீக் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி படுதோல்வியடைந்தது. குறிப்பாக டெல்லி அணியின் ரிஷாப் பண்ட்டை மும்பை பந்துவீச்சாளர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை.

மும்பை அணியில் விளையாடும் இலங்கை வீரர் லசித் மலிங்க, உலகக் கிண்ணத்தில் விளையாட வேண்டும் என்பதற்காக ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட இலங்கை கிரிக்கெட் சபை அனுமதிக்கவில்லை.

ஆனால், டெல்லி அணிக்கு எதிரான தோல்வியைத் தொடர்ந்து பெங்களூர் மற்றும் பஞ்சாப் அணிகளை மும்பை இந்தியன்ஸ் சந்திக்க உள்ளது. எனவே மலிங்கவை தங்களது அணியில் விளையாட அனுமதிக்க வேண்டும் என மும்பை அணி கோரியதைத் தொடர்ந்து, இந்தியக் கிரிக்கெட் சபை இலங்கை கிரிக்கெட் சபையிடம் கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு இலங்கையும் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், மலிங்க ஐ.பி.எல் தொடரின் சில போட்டிகளில் ஆட இலங்கை அணி அனுமதி அளித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக தலைமைத் தேர்வாளரான முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் அஜந்த டிமெல் கூறுகையில், 'மலிங்க எங்களது சிறந்த பந்துவீச்சாளர் ஒருநாள் போட்டியில் அவ ரது இடம் உறுதியானது தான். ஆகவே, உலகக் கிண்ண அணியில் அவர் இடம் பெறுவார்' என்று தெரிவித்துள்ளார்.



**இன்றைய ஐ.பி.எல் ஆட்டங்கள்**

2019 IPL

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் VS கிங்ஸ் லெவன் பஞ்சாப்

இரவு 8மணி

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவரது ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு-கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பின் தரம் III இற்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர் பாக கல்வி இராஜங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வர னின் வேண்டுகோளுக்கமைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு கடந்த 14ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த அமைச்சரவைத் தீர்மானத்தை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பொதுச்சேவை ஆணைக்குழுவுடன் ஆலோசித்து நடைமுறைப்படுத்துமாறு பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனங்களை வழங்குவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் எதிர்வரும் வருடப் பிறப்பிற்கு முன்பாக மிகத் துரிதமாக மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சின் உரிய அதிகாரிகளுக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரனரால் பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத் தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்காக அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதகமைகள் கீழ்வருமாறு:

ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமைய க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ் அல்லது சிங்கள பாடம் உட்பட பிரதான பாடங்கள் சித்தியுடன் க.பொ.த உயர் தரத்தில் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய நிரந்தர நியமனம் பெற்றெஞ்சிய நியமனம் பெறத்தவறிய 491 தொண்டராசிரியர்கள் 31.12.2015 இற்கு முன்னர் தொடர்ச்சியாக 03 ஆண்டுகளைத் தமது சேவையில் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

தொண்டராசிரியர்கள் இடப்பெயர்வு மற்றும் மீள்குடியமர்வுக் காரணமாக ஒன்றிற்கும் மேற்பட்ட பாடசாலைகள், வேறுபட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றியுள்ளமை தொடர் சேவையாகக் கணிக்கப்படும். 3 வருட சேவை கலண்டர்ஆண்டுக்குப் பதிலாகப் பாடசாலைக் கல்வி ஆண்டின் அடிப்படையில் கணிப்பிடப்படும்.

ஏற்கனவே 2017,2018 ஆம் ஆண்டுகளில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் முக்கிய கவனத்திலெடுக்கப்படுவர். தொண்டராசிரியர்கள் சிலர் நலன்புரி நிலையங்களில்தங்கியிருந்தாலோ அன்றேல் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டு நிரபராதிகள் என ஏற்றுக்கொள்ளப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களது அத்தகையகாலம் அவர்களது தொடர் சேவைக் காலத்தை எவ்வகையிலும் பாதிக்காது. இவ்விடயம் ஜனாதிபதியால் பாதுகாப்பு அமைச்சின் சார்பாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வயது எல்லை 50 வயதிற்கு மேற்பட்டதாக இருத்தலாகாது.

சேவைக்கால ஆதார ஆவணங்கள் நாட்டில் இடம்பெற்ற இடர்களின் போது சேதமடைந்தாலோ அன்றி தொலைந்தாலோ சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் தொண்டராசிரியர்கள் தமது சேவைக்காலத்தைப் பற்றிய உறுதிமொழியை வழங்குவதுடன் இதற்கு ஆதாரமாகப் பாடசாலைமட்ட ஆதாரங்களான நேரசூசிகை, அதிபரது கடிதம், விடுமுறை விவரங்கள், ஆசிரிய சேவை தொடர்பானீ முறைசாராக் கடிதங்கள், செயலமர்வுகளில் பங்குபற்றிய சான்றுகள் , ஒளிப்படங்கள், பாடசாலைச் சஞ்சிகைகள் போன்றவற்றையும் சமர்ப்பிக்கமுடியும்.

மேற்குறிப்பிட்டவை கல்வித் தகைமைச் சான்றிதழ்களுக்கான ஆதாரங்களாக அமையாது.

55 சதவீத வரவு நிரந்தர நியமனம் கோருவதற்குப் போதுமானது.

சிறப்புத் தேவைக்குரிய தொண்டராசிரியர்கள் மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்குட்பட்டிருப்பின் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

மேற்படிகுறிப்பிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் வடக்கு மாகாணத்திற்குரியதாகும்.

மேலும் 06.12.2016 திகதிய அமைச்சரவைப்பத்திரத்தின் மூலம் கிழக்கு மாகாணத்தில் தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கத் தீர்மானிக்கப்பட்ட 445 பேருக்கும் அதிகமானோர் காணப்பட்டமையால் மொத்தம் 811 தொண்டராசிரியர்களும் கவனத்தில் எடுக்கப்பட்டு போர் சூழலில் அவர்கள் தொண்டராசிரியர்களாகச் சேவையில் ஈடுபட்ட தகைமைகளை நிறைவு செய்த சகல ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட 14.03.2019 அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஐ-07)

## கொலைகரன்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசைக் காப்பாற்றி வைத்திருப்பதாகக்கூறுவது உண்மையே. அதற்குக் காரணம் இருக்கின்றது. இப்போது இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு ஆதரவு வழங்கவில்லை என்றால் மஹிந்த ராஜபக்ஷதான் வருவார்.

ஆகவே வரவு-செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க தவறினால் இந்த அரசு கவிழும். அரசு கவிழ்ந்தால் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ வருவார். நாங்கள் நடுநிலைவகித்தாலும் அவர் வருவார். மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் வருவதை எமது மக்கள் விரும்புவார்களா? ஆகவே நாங்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்போம்.

எங்கள் ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்திற்கும் அதிகமான மக்களை கொலை செய்து இந்த மண்ணிலே பெரிய இனப்படுகொலையை நடத்திய கோட்டாபய ஜனாதிபதியாக வர வேண்டும் என்று நிற்கின்றார். ஜனாதிபதியாக வர வேண்டும் என்ற கனவை கோட்டாபய முதலில் விட வேண்டும். அந்தக் கொலைகாரன் ஜனாதிபதியாக வருவதை தமிழ் மக்கள் விரும்பவில்லை - என்றார். (ஐ)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துரையாடியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்றைக் கொண்டுவருவதற்கு அரசு முன்னெடுப்புக்களைச் செய்துகொண்டிருக்கின்றது.

இந்நிலையில், புதிய சட்டவரைவில் இருக்கக் கூடிய பாதகமான தன்மைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்த ஊடகங்கள் ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ஐ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போது நீர்ப்பிரச்சினை தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலையே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அதிகாரப் பரவலாக்கலில் எமக்குக் கிடைத்த அதிகாரத்தில் ஒரு துளியைக் கூட திரும்பக் கொடுப்பதில் எனக்கு உடன்பாடில்லை.

மத்திய அரசு பாடசாலை அபிவிருத்திக்காக ஒரு தொகைப் பணத்தை ஒதுக்கியுள்ளது. நீச்சல் தடாகம் போன்ற வசதிகளை உருவாக்கத் தேசிய பாடசாலைகளுக்கே அரசு வழங்குகிறது. அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பாடசாலை அதிபர் மற்றும் பெற்றோர் அந்த நிதியைப் பெற்று பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய விரும்பினார்கள். அதனால் தேசிய பாடசாலையாக்கும்படி கோரினார்கள். எனக்கு அதில் விருப்பமில்லாவிட்டாலும், அவர்களின் கோரிக்கையைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பினேன்.

இந்த விடயத்தில் தனிப்பட்ட விருப்பு வெறுப்பின்படி செயற்பட முடியாது. விஞ்ஞானபூர்வமாகச் செயற்படவேண்டும். தேசிய பாடசாலைகளுக்கே நீச்சல் தடாகம் போன்ற வசதிகள் வழங்கப்படுகின்றன. ஒரு தொகை நிதி மத்திய அரசிடம் உள்ளது என்ற இரண்டு காரணங்களின் அடிப்படையிலேயே அந்தச் சிபாரிசைச் செய்தேன்.

ஏனைய மாகாணங்களில் 3.5 வீதமான தேசிய பாடசாலைகள் உள்ளன. ஆனால் வடக்கில் 2 வீதமான தேசிய பாடசாலைகள் தான் உள்ளன. இன்னும் 14 பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக்கினால், ஏனைய மாகாணங்களின் அளவில் வடக்கிலும் தேசியப் பாடசாலைகளை உருவாக்கலாம். இதை நான் விருப்பமின்றிச் செய்வதால், வடக்கிலுள்ள எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் அபிப்பிராயம் கேட்டேன். இந்தத் திட்டத்தை செயற்படுத்தலாமா, அப்படியெனில் எந்தெந்தப் பாடசாலைகளை தேசிய பாடசாலையாக்கலாமெனநான்கேட்டிருக்கிறேன்.

எல்லா எம்.பிக்களிற்கும் கடிதம் அனுப்பினேன். உங்களின் விருப்பமில்லாமல் செய்யமாட்டேன் என அதில் குறிப்பிட்டேன். எனக்கு இதில் விருப்பமில்லையென்றாலும், தமது பாடசாலைகளைதேசியப் பாடசாலைகளாக்குமாறு பாடசாலைகள் கேட்கிறார்கள், அதனால் மக்கள் பிரதிநிதிகளிடம் கருத்து கேட்டேன். அவர்கள் யாரும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இப்போது சர்ச்சையானபின்னர் அறிக்கைகள் விடுகிறார்கள். நான் அறிக்கைவிடவில்லை. நான் அறிக்கை அரசியல் வாதியல்லன - என்றார். (ஐ-07)

## இனியொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்ல எதனையும் எதிர்கொள்ள தமிழர்கள் தயார். அப்படி ஒரு கறுப்பு ஜூலை வந்தால் இனி இந்த நாடு இரண்டாக உடைவதிலேயே முடியும்.

- இப்படி எச்சரிக்கை செய்துள்ளார் ரெலோ அமைப்பின் செயலாளர் என்.சிறீகாந்தா.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் ஊடகவியலாளர்களை சந்தித்த டிலான் பெரேரா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலப்பு நீதிமன்றப் பொறிமுறையைக் கேட்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலப்பு நீதிமன்ற பொறிமுறையை கேட்டால் மீண்டும் கறுப்பு ஜூலை ஒன்று உருவாகும் எனக் கூறியிருக்கின்றார். அதன் அர்த்தம் ஐ.நாவில் நாங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்வோம், இலங்கையில் என்ன வேண்டுமானாலும் செய்வோம், நீங்கள் பொத்திக் கொண்டு இருக்கவேண்டும் என்பதுதான்.

கறுப்பு ஜூலை என்பது 1983 ஆம் ஆண்டு தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனவெறி. அதுவே இந்த நாட்டில் 26 வருடங்கள் நீடித்த மிக மோசமான யுத்தத்துக்கு வழிகோலியது. அந்த யுத்தத்தில் 2 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டார்கள்.

தமிழ், சிங்களத் தரப்பில் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் உயிரிழந்தார்கள். பலர் அங்கவீனமாக்கப்பட்டார்கள். பலர் காணாமல் போனார்கள். இவற்றுக்கெல்லாம் மூல காரணம் கறுப்பு ஜூலை என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

டிலான் பெரேராவின் கருத்து சந்திச் சண்டியன்களின் கருத்துப் போல் இருக்கின்றது. உண்மையில் டிலான் பெரேரா இலங்கையில் உள்ள மக்களை நேசித்திருந்தால் கறுப்பு ஜூலை என்ற வார்த்தையை உச்சரிப்பதற்கே அவருக்கு வாய் கூசியிருக்க வேண்டும். ஆனாலும் கூச்ச நாச்சம் இல்லாமல் அவர் அந்த கருத்தைக் கூறியுள்ளார்.

அவருக்கு நாங்கள் கூற விரும்புவது, கறுப்பு ஜூலை அல்ல, அதனைவிட மோசமான சம்பவங்களையும் தமிழ் மக்கள் எதிர்கொள்ள தயார். தமிழ் மக்களின் நீதிக்கான எதிர்பார்ப்பின் முன்னால் கறுப்பு ஜூலை என்பது ஒன்றுமே இல்லை.

கறுப்பு ஜூலையை காட்டி தமிழர்களை அச்சுறுத்தும் எண்ணம் இருந்தால் அது வெறும் கனவு மட்டுமே என்பதை டிலான் பெரேரா நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை வந்தால், அது முள்ளிவாய்க்காலில் முடியாது. அது இலங்கை இரண்டாக உடைவதில் முடியும் - என்றார். (ஐ-7)

## ஜெனீவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெறும் வரவு - செலவுத் திட்டத்தில் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குறித்த குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கைவாழ் மக்களின் மனிதஉரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும். இதற்கு தேவையான யோசனைகளை முன்வைக்க வேண்டும் என்பதுடன், சர்வதேச மட்டத்தில் தடையாகவுள்ள சட்டத் திட்டங்களையும் அரசு சுட்டிக் காட்டவேண்டும்.

ஆனால், ஒவ்வொருமுறையும் குற்றவாளிகளாகவே ஜெனீவாத்தொடரில் அரச பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். அங்கு ஏதாவது கேள்வி எழுப்பப்பட்டால் மட்டுமே பதிலளிக்கின்றனர். இந்நிலைமை மாறவேண்டும்.

ஜெனீவாக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக இங்கிருந்து பல குழுக்கள் செல்கின்றன. இதில் தமிழ், சிங்கள இனவாதிகளும் உள்ளடங்குகின்றனர். அரசியலில் வங்குரோத்து நிலையை அடைந்துள்ள இவர்கள், ஜெனீவாவை பிரசாரக் களமாகப் பயன்படுத்தி தமது அரசியலை பலப்படுத்துவதற்கு முற்படுகின்றனர்.

பங்குச் சந்தையில் நிதி மோசடி செய்த, ஆட்களைத் திரட்டுவதாக வெளிவிவகார அமைச்சிடம் பணம் பெற்று மோசடியில் ஈடுபட்டவர்கள் எல்லாம் இன்று ஜெனீவாவில் தேசப்பற்றாளர்களாக மாறியுள்ளனர். இது வெட்கப் படவேண்டிய விடயமாகும். ஜெனீவாத் தொடரை காட்டி, பெரும் வியாபாரமே நடக்கின்றது.

உள்ளக நீதிப்பொறிமுறை உரிய வகையில் செயற்படுத்தப்படாததால்தான் , உள்நாட்டு விவகாரத்தில் சர்வதேசம் தலையீடு செய்கின்றது. 11 மாணவர்களைக் கடத்தி, கப்பம் கோரிய அதிகாரிக்குக்கூட உயர் பதவி வழங்கப்படுகின்றது. அவருக்கு எதிராக விசாரணை நடந்தால் அதில் அரசியல் தலையீடு இடம்பெறுகின்றது. உள்ளகவிசாரணைக்கு கொள்கை ரீதியில் இணக்கம் தெரிவித்துவிட்டு, இவ்வாறு நடந்தால் என்ன செய்வது?

அதேவேளை, கலப்பு நீதிமன்ற பொறிமுறை தோல்வி கண்ட பொறிமுறையாகும். எனவே, அதை இலங்கை நிராகரித்ததை வரவேற்கின்றோம். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்குமாறு முன்னரே நாம் கோரிக்கை விடுத்தோம். அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும் - என்றார். (ஐ)

## யாழ். மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போது நீர்ப்பிரச்சினை தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலையே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாணத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினை முக்கிய சவாலாக இருக்கிறது. நாட்டிலுல் 25 மாவட்டங்கள் இருக்கின்றபோதும் ஒரு ஆறும் நதியும் ஓடாத ஒரேயொரு மாவட்டம் என்றால் யாழ் மாவட்டம் மட்டும் தான். ஆகையால் யாழ். மக்களை பொறுத்தவரை வாழ்வுக்கு அடிப்படையான கேள்வியாக நீர்ப் பிரச்சினைமாறிக் கொண்டிருக்கின்றது.

ஆகையால் நான் ஆளுநராக இருக்கின்ற காலத்தில் வடக்குக்கு குடிதண்ணீரைக் கொண்டு வருவதை முக்கியமாகச் செய்யவேண்டிய வேண்டுமென்பது என் நோக்கமாக உள்ளது. அதற்கான எல்லா முயற்சிகளையும் நான் செய்வேன். இதனடிப்படையில் தற்போதும்என் நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருக்கின்றேன்.

இதற்கமைய யாழ் மாவட்டத்திலுள்ள குடிதண்ணீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 6 திட்டங்கள் தற்போது இருக்கின்றன. அவற்றை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனூடாகவே இங்குள்ள குடிதன்னீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியுமென்றும் எதிர்பார்க்கின்றேன்.

இப்போதுவடமராட்சியிலிருந்து கடல் நீரை எடுத்து குடிதண்ணீராக்குவது தொடர்பிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. அதற்கான இறுதிக் கட்டப்பேச்சு நடக்கின்றன. இதற்குப் பின்னராக ஆறுமுகம் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் பாலியாறு, பறங்கியாறு ஆகிய திட்டங்களுடன் மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் இருந்து நிலத்துக்கு அடியில் குழாய்நீரைக் கொண்டு வரும் திட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இறுதியாக ஆறாவது திட்டமாக இரணைமடுத் திட்டத்துக்கும் செல்லலாமெனநினைக்கின்றோம். ஏனெனில் இரணைமடு தொடர்பில் சில குழப்பங்களும் பயமும் இருக்கின்றன. ஆகையால் அதனை இப்போது நாம் செய்யவில்லை. ஆனாலும் இது தொடர்பிலான பேச்சுகள் நடக்கின்றன. ஆகையால் அதற்கும் அனைவரும் விரும்பினால் அந்தத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தலாம்.

குறிப்பாக இரணைமடுக் குளத்திலிருந்து கடலுக்குச் செல்லும் தண்ணீரைப் பணம் கொடுத்து வாங்குவதற்கு நாம் தயார். அந்தப் பணம் கிளிநொச்சி விவசாயிகளுக்கு உரித்துடையாதாக இருக்கட்டும். காரணம் இன்று போத்தல் தண்ணீரைப் பெருமளவு பணம் கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கின்றோம். அந்த நிலை இல்லாமல் இரணைமடு விவசாயிகளுக்குப் பணம் கொடுத்து வாங்குவதற்கு நாம் தயார். விவசாயிகள் தயாராக இருந்தால் நாளைக்கும் நாங்கள் அதனைச் செய்யலாம்.

இவ்வாறான நிலையில் இங்குள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உடனடியாகச் செய்யக் கூடிய விடயங்களைச் செய்ய வேண்டும். ஆனாலும் இங்கு நீரைப் பராமரிக்க அல்லது முகாமைத்தவப்படுத்தாமலும் இருக்கிறோம். அதுதான் இன்றைக்கு பெரிய பிரச்சினையாக இருக்கிறது - என்றார். (ஐ-07)

காலைக்கதிர்
Kalaikathir



# முஸ்லிம் மக்கள் காடுகளை ஒருபோதும் அழிக்கவில்லை

## பிரதியமைச்சர் அப்துல்லா தெரிவிப்பு

முஸ்லிம்கள் வில்பத்தை மாத்திரமல்ல நாட்டிலுள்ள எந்த காட்டையும் அழிக்கவில்லையென பிரதி அமைச்சர் அப்துல்லாஹ் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வில்பத்து வன சரணாலயம் அனுராதபுரம், புத்தளம் மாவட்டத்துக்கு சொந்தமானது. முசலிப் பிரதேசம் மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

அந்தவகையில் வில்பத்தின் எல்லைக்கு மிக நீண்ட தூரத்துக்கு அப்பாலேயே இந்த முசலிப் பிரதேசம் அமைந்துள்ளது.



1990 ஆம் ஆண்டு இந்த பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்ட பின்னர் மீளக்குடியேற விரும்பினர்.

ஆனாலும் அவர்களுக்கான காணிகள் இல்லாதமையால், கடந்த அரசால் மீள் குடியேற்றத்திற்கென உயர் மட்டக்குழுவொன்று அமைக்கப்பட்டு அவர்களின் சிபாரிசுக்கமைய காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவர்களுக்கான காணிகள் முறைப்படியே வழங்கப்பட்டன. எனினும் அடிப்படை வசதிகள் இல்லாததால் அநேகமானோர் இன்னும் அந்தப் பிரதேசத்தில் மீள் குடியேறாமல் புத்தளத்தில் வாழ்கின்றனர். அந்தவகையில் முஸ்லிம்கள், வில்பத்தை மாத்திரமல்ல நாட்டின் எந்த காட்டையும் அழிக்கவில்லை.

ஆகவே வில்பத்து விவகாரத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை மீண்டும் மீண்டும் துரத்துவதை விடுத்து, இவ்விடயத்தில் ஆணைக்குழுவை அமைத்து உண்மை நிலையை தெளிவுபடுத்த வேண்டும் – என்றார். (ஐ)

# தாதியர் போராட்டம்

கொழும்பு, மார்ச் 27

நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலையிலுள்ள தாதியர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் நேற்றுக் காலை 7 மணி முதல் இடம்பெற்றது.

தாதியர் எதிர்நோக்கும் சம்பளம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து சுகாதார அமைச்சு கவனத்திற்கொள்ளாமல் செயற்படுவதாக கூறியே இந்தப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் போராட்டம் இன்று வரை தொடரவுள்ளது.

# அமைச்சுப் பதவி பறிபோன விரக்தியில் டக்ளஸ் எம்.பி.!

## சபையில் சாள்ஸ் எம்.பி. கிண்டல்



கொழும்பு, மார்ச் 27

அமைச்சுப் பதவி பறிபோன விரக்தியிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து வருகிறார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வரவு – செலவுத் திட்டத்தின் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதில் பங்கேற்று உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு கூறினார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, கூட்டமைப்பைக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

அமைச்சுப் பதவி பறிபோன விரக்தியில் பேசும் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்கள் குறித்து அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என சாள்ஸ் எம்.பி. இதன்போது குறிப்பிட்டார். (ஐ)

# வெளிநாட்டுத் தூதுவர்களால் நாட்டின் பெயருக்கு களங்கம்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 27

தூதுவர்களாக நியமிக்கப்பட்டவர்கள் நாட்டின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையிலே செயற்பட்டுள்ளனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வரவு – செலவுத் திட்டத்தின் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குறித்த குழுநிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தகுதியில்லாத தூதுவர்களை நீக்கிவிட்டு வெளிநாட்டுச் சேவையில் அனுபவமிக்கவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் இன்டர்போல் சிவப்பு எச்சரிக்கை அறிக்கையில் இருக்கின்றனர். அத்துடன் சார்க் வலய நாடுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அனைத்துத் தூதுவர்களின் நியமனங்களும் அரசியல் நியமனமாகும்.

கடந்த காலங்களில் இலங்கையின் தூதுவர்களாக நியமிக்கப்பட்டவர்கள் நாட்டின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டனர்.

அத்துடன் அரசு அமெரிக்காவுடன் செய்துகொள்ளவுள்ள அமெரிக்க பாதுகாப்புப் படை ஒப்பந்தம் நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்தானதாகும் – என்றார். (ஐ)

# வெப்பமான காலநிலை நீடிக்கும்!

நாட்டின் சில பகுதிகளில் வெப்பமான காலநிலை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடமேல் மாகாணத்திலும் மன்னார், கம்பஹா மற்றும் கொழும்பு உள்ளிட்ட மாவட்டங்களிலேயே இவ்வாறு வெப்பமான காலநிலை நீடிக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், வெப்பமான வானிலை நிலவும் வேளையில் அவதானமான செயற்படுமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சுதந்திரக் கட்சியின் செயற்பாடு பேச்சுக்கு தடையாக அமையும்

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 27

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, வரவு – செலவுத்திட்ட வாக்கெடுப்பில் இருந்து விலகியிருப்பது தமது கட்சியுடன் இடம்பெறும் பேச்சுக்கு தடையாக அமையுமென பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலொன்றிலேயே பீரிஸ் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வரவு – செலவுத்திட்டத்தின் முதலாவது வாக்கெடுப்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கலந்துகொள்ளவில்லை.

இவர்கள் எதிர்க்கட்சியில் இருப்பதாக அண்மையில் தெரிவித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இவ்வாறு செயற்படுவது ஏற்புடையதல்ல. அத்துடன் நம்பிக்கை அடிப்படையிலேயே நாம் பேச்சு நடத்தினோம்.

சுதந்திரக் கட்சி சிந்திக்காமல் தொடர்ந்து செயற்படுமாயின் அது பேச்சுக்கு தடையாக அமையும் – என்றார். (ஐ)

# இரண்டாம் முறை கைதாகிய தமிழக மீனவருக்குச் சிறை!

யாழ்ப்பாணம், மார்ச் 27

இலங்கை கடற்பரப்புக்குள் இரண்டாவது தடவையும் அத்துமீறி நுழைந்து, மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவருக்கு இரண்டாண்டு சிறைத் தண்டனையை ஊர்காவற்றுறை நீதிமன்றம் விதித்துள்ளது.

இந்த மீனவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஊர்காவற்றுறை நீதிமன்றம் விசாரணைக்கு உட்படுத்திய நேற்றுமுன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 8 பேரும் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மீரிகம தடுப்பு முகாமுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு இந்தியாவுக்கு அனுப்புவதற்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட மீனவர்களில் ஒருவர், இதே குற்றச்சாட்டுக்காக ஏற்கனவே கைது செய்யப்பட்டு, ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு எச்சரிக்கையுடன் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டவர் என்பது தெரியவந்தது.

இவ்விடயம் குறித்து ஆராய்ந்த சட்டமா அதிபர் திணைக்களம், நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து வழக்கை மீளாய்வு செய்யுமாறு நீரியல் வளத் துறையினரின் கவனத்துக்குக் கொண்டு சென்றது.

பின்னர் இந்த மீனவர் தொடர்பில் கடந்த 22ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களம், நீரியல்வளத் திணைக்களத்தின் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட மீனவருக்கு 2 ஆண்டு காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

மீரிகம தடுப்பு முகாமிலிருந்த இந்திய மீனவர் தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஐ)




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 27.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.